மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

‘காளை’ வீழ்ந்ததென்று கனவு கண்டேன்!

புதுக்கச்சேரி தெரு,
கரூர்.

ஐந்து லட்ச ரூபாய் கொடுத்தால் அடுத்த தேர்தலில் காங்கிரசை ஒரு கை பார்க்க முடியுமென்று அறிஞர் அண்ணா கூறினார். ‘1962ல் காங்கிரஸ் காளை

மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 2 | 3—1—60 | ஒலி 10

மக்கள் கட்டளையே 'மாலைமணி'யின் பணி!

தலையங்கம் தீட்டி விளக்கமளிக்க வேண்டிய சம்பவங்கள் எத்தனையோ இருந்தும்—தனக்குத் தானே புகழ் மாலை சூட்டிக் கொள்ள வேண்டி ஒரு சந்தர்ப்பம் மாலை மணிக்குக் கிடைத்திருக்கிறது! இது ஒரு பக்கத்திலே வேதனையும், மற்றொரு பக்கத்திலே சிறிது மகிழ்ச்சியும் அளிக்கத் தான் செய்கின்றன!

தனக்குத் தானே புகழாரம் சூட்டிக் கொள்வது ஒரு பக்கத்திலே அநாகரீகம் என்று நினைத்தாலும்—இது மனித இயற்கைக்கு அப்பாற்பட்டது அல்ல என்ற எண்ணமும் தோன்றத் தான் செய்கிறது!

"மாலைமணி" ஏடு துவக்கப்பட்டு ஏறத்தாழ பதினொன்கு திங்களுக்கு மேலாகின்றன! இந்த பதினொன்கு திங்களில் மாலைமணி செய்திருக்கின்ற பணிகளை நாங்களே விளக்கிக் காட்டுவது பெருந்தன்மைக்கு ஏற்றதாகக் கருத முடியாது! மாலைமணியின் பணிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அது வளர்ந்திருக்கிற உயரத்தைக் கணக்கிட்டுப் பார்த்தாலே போதுமானதாகும்!

ஆரம்ப காலத்திலிருந்து நமது தலைவர்களின் சொற்பொழிவுகளை ஒரு வார்த்தையும் விடாமல் வெளியிட்டு மக்களுக்கு நல்ல இன உணர்ச்சியை ஊட்டி வந்திருக்கிறது! அப்போதைக்கப்போது நிகழ்ந்துவரும் சம்பவங்களுக்கு விளக்கம் தந்து மக்களை எழுச்சி பெற வைத்திருக்கிறது! உணர்ச்சி வெறியூட்டும் தலையங்கத்தின் மூலம் மக்களை புரட்சி எரிமலைகளாக்கி வந்திருக்கிறது!

அடுத்தபடியாக, சென்னை நகர சபைத் தேர்தலின் போது, வெறும் தேர்தல் பிரச்சார ஏடாகவே மாறி முழு மூச்சுடன் பணி புரிந்திருக்கிறது! இந்த மேயர் தேர்தலிலும்—"நாம் தான் மேயர்" என்பதை திட்டவட்டமாக உறுதி கூறி மக்களிடத்திலுள்ள ஐயப்பாடுகளை அகற்றி வந்திருக்கிறது!

இந்த ஏடு துவக்கப்பட்ட நேரத்தில் அச்சப்பட்டோம்—பலரும் அச்சமூட்டினார்கள்! அந்த அச்சம் இன்னும் எங்களை விட்டு அகலவே இல்லை! ஆனால் அன்றுள்ள அச்சத்திற்கும், இன்றுள்ள அச்சத்திற்கும் பெருத்த வேறுபாடுகள் உண்டு! அன்றைய தினம் "வளருவோமா" என்று அச்சப்பட்டோம்! இன்றைய தினம் "இந்த வளர்ச்சி எங்கு கொண்டு போய் விடுமோ" என்று கவலைப் படுகிறோம்!

மாலைமணியின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைபவர்களின் தொகையை விட, வெறுப்படைபவர்களின் தொகையே அதிகம்!

மாலைமணியின் வளர்ச்சியை பலர் ஆயாசத்தோடுப் பார்க்கின்றனர், அருவெறுப்போடுப் பார்க்கின்றனர், அச்சத்தோடும் பார்க்கின்றனர், பொறாமையோடும் பார்க்கின்றனர்! உண்மையிலேயே மாலைமணியைக் கண்டு ஆளும் கட்சியினர் ஆத்திரப்படுகின்றனர்! ஆளும் கட்சிக்கு முதல் வைரி மாலைமணி என்பதைப் போல் பலர் பேசி வருகின்றனர்!

நம்முடைய தலைவர்கள் பேசுகின்ற பேச்சை வெளியிட்டு மக்களுடைய எண்ணத்தில் புரட்சி விதையை விதைப்பது அவர்களுக்குப் பெரும் கவலையாக இருக்கிறது! அடுத்தபடியாக மாலைமணி தீட்டுகின்ற தலையங்கம் அவர்களுடைய உள்ளத்தை குமுற வைக்கிறது!

எல்லாவற்றிருக்கும் மேலாக, முன் பக்கத்திலே போடப்படுகின்ற கேலிச் சித்திரம் ஒவ்வொன்றும் அவர்களை எரிமலையாக்குகின்றன!

அருப்புக் கோட்டையிலே கருமாதி என்று கேலிச் சித்திரம் வரைந்து முன் பக்கத்திலே போட்டிருந்தோம்! இதைக் கண்டு ஆத்திரப்படாத காங்கிரஸ்காரர்களே கிடையாது! பாண்டிச்சேரியிலே நாம் தோற்றபோது அவர்கள் நம்மைப்பார்த்து சொன்னது தான் இது! அப்போது அவர்கள் 'அரசியல் நாகரீகத்தோடு நடந்து கொண்டிருந்தால் நாமும் இந்த கேலி சித்திரத்தை இப்போது போட்டிருக்கவே மாட்டோம்!

அடுத்தபடியாக— "பலமில்லாத காங்கிரஸ்கட்சி மேயர் தேர்தலில் ஈடுபட்டது தற்கொலைக்கு ஒப்பானது" என்பதை விளக்க, காங்கிரஸ் கட்சி கயிற்றில் தொங்குவது போல் ஒரு கேலிச்சித்திரம் போட்டிருந்தோம்! இது, காங்கிரஸ்காரர்களுக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரையில் எரிச்சலை ஊட்டி இருக்கிறது!

அருமை காங்கிரஸ் நண்பர்கள் ஆத்திரப்படுவதை கொஞ்சம் விட்டு விட்டு ஆராய்ந்து பார்க்கும் தன்மையில் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும்! நகர சபையில் தாங்கள் இருப்பது முப்பத்தி ஏழு பேர்தானே! தங்களோடு கூட்டாக வருவோரின் எண்ணிக்கை 11 பேர்கள்தானே! எப்படி பாடுபட்டாலும் 48 பேர்களுக்கு மேல் எண்ணிக்கையை பெருக்குவது குதிரைக் கொம்பல்லவா! நிலைமை இப்படி இருந்தும் மேயர் தேர்தலுக்கு நின்று தோற்பதென்றால் தற்கொலைக்கொப்பானது தானே? படம் போட்டால் மட்டும் ஆத்திரப்படத் தெரிகிறது! உள்ள நிலையை சிந்தித்துப் பார்க்க மட்டும் தெரியவில்லையா?

நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் கனம் காமராஜர் கூட மாலைமணி போட்டிருந்த கேலிசித்திரத்தைப் பார்த்துவிட்டு "இது வெறும் பிழைப்புக்காகப் போடப்பட்டது" என்றும் கூறினாராம்! சித்திரம் பிழைப்புக்காகப் போடப்பட்டிருக்கலாம்! ஆனால் அது உணர்த்தும் உண்மையான பொருளை, முதலமைச்சர் உணர மறுப்பது ஏன் என்று தான் எங்களுக்குப் புரியவில்லை!

மாலைமணி, காமராஜரின் ஆட்சியை கவிழ்ப்பதற்காக பாடுபடவில்லை, அதற்காக கேலிச் சித்திரம் வரையவும் இல்லை! அடிமை வாழ்வு நீங்க வேண்டும்! நல்லாட்சி மலர வேண்டும்! அடிமைத்தனம் இல்லாத நாட்டில் காமராஜரே ஆட்சி புரியலாம்! பிற்கால சந்ததிகளின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் எங்களை வெறுப்பது, விரோத மனப்பான்மை பாராட்டுவது யாருக்கும், எவ்விதத்திலும் நன்மை பயக்காது!

நமது நண்பர்களின் அரவணைப்பு எதிரிகளின் கணைகளையெல்லாம் தூள் தூளாக்கிவிடும் என்பதை நாம் உணர்வோம்!

ஆயிரக்கணக்கான மக்கள் மாலைமணியின் பணியை பாராட்டுகின்றனர்! கேலிசித்திரம் பிரமாதம் என்கிறார்கள் பலர்!" ஆட்சியாளர்களுத் தரும் சவுக்கடி அற்புதம், மிக அற்புதம்" என்கிறார்கள். இன்னும் பலர்! "தலைவர்களின் பேச்சு எங்களையெல்லாம் மகிழ வைக்கிறது" என்கிறார்கள் வெகுபலர்! தினம் தினம் நூற்றுக்கு மேற்பட்ட கடிதங்கள் எங்களை உற்சாகப் பெருவெள்ளத்தில் மூழ்கடிக்க வைக்கின்றன! அவர்களுக்கெல்லாம் எங்கள் இதய பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

தமிழகத்தில் மட்டுமல்ல, சிங்களத் தீவிலும் மாலைமணி சிங்க நடை போட்டு வருகின்றது! சிங்களத் தீவில் வாழும் எங்கள் சிங்காரத் தமிழ் மக்களுக்கும் நன்றி செலுத்திட கடமைப் பட்டிருக்கிறோம்!

மக்கள் இடும் கட்டளையை நிறைவேற்றிட மாலைமணி காத்து நிற்கிறது! மாலைமணி என்னென்ன பணிகளை செய்ய வேண்டும் என்பதை எழுதுங்கள்! உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிறோம்!

மாலைமணியின் வாழ்வுக்கும், தாழ்வுக்கும் மக்கள் பொறுப்பேற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற மகிழ்ச்சியால் மேலும் உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்கி விட்டோம்! உங்கள் ஆதரவால் எங்கள் பணி வெல்லும்! நிச்சயமாக வெல்லும்!

வெயிலால் மரம் பட்டுப் போகாது!

மாற்றார் திட்டுவதாலே கழகம் கெட்டு விடாது!

அறிஞர் அண்ணா பேருரை!



சென்னை, 48வது வட்ட நகராட்சிமன்ற உறுப்பினர் தோழர் க. வரதன் அவர்களுக்கு சைக்கிள் அன்பளிப்பு விழா கடந்த மாதம் 26-ந் தேதி அன்று புரசை குயப்பேட்டையில் தோழர் அ. உ. நடராசன் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் தோழர்கள்லோகநாதன், நா.சு. மணி ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

அடுத்து சென்னை மாநகராட்சி மன்றத்தின் உரிப்பினரும், நிதிக் குழுத் தலைவருமான தோழர் வி. முனுசாமி அவர்கள் பேசுனார். அவர் பேசுகையில் திராவிடமுன்னேற்றக் கழகம் கடந்த தேர்தலில் பணசக்தியை நம்பி ஈடுபடவில்லை, மக்கள், பலத்தை மககள் சக்தியை நம்பித்தான் ஈடுபட்டதென்றும், சட்டமன்ற உறுப்பினர்-பாராளுமன்றஉறுப்பினர்களைக் காட்டிலும் அதிக பொறுப்பு நகராட்சிமன்ற உறுப்பினர்களுக்குத்தான் — அதிலும் ஏழைகள் வாழ்விலே அக்கரை கொண்ட திராவிட முன்னேற்றக் கழக நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்குத்தான் பொறுப்பும் அக்கரையும் அதிகம் இருக்கிறதென்றும் கூறினார்.

இறுதியில் தோழர் க. வரதன் அவர்களின் வாழ்க்கைத்துணைவியாருக்கு காஞ்சிபுரம் சேலையும், ஜாக்கெட் துண்டும் அறிஞர் அண்ணா அவர்களால் அளிக்கப்பட்டது.

பின்னர் தோழர் க. வரதன் அவர்களுக்கு சைக்கிளை அன்பளிப்பாக அளித்தார். சைக்கிள் அன்பளிப்பாக அளித்த பொதுமக்களுக்கும், சார்பு மன்றங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது—

அன்புள்ள தலைவர் அவர்களே, அருமை தோழர்களே!

இந்த வட்டாரத்தில் மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் க. வரதனுக்கு திராவிட முன்னேற்றக் கழக தோழர்களும், ஆதரவாளர்களும் சேர்ந்து அவருக்கு சைக்கிள் அளிக்கும் இந்த நல்ல விழாவை ஏற்படுத்தியது கண்டு மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

தோழர் வரதன் இந்தப் பகுதியில் நல்ல செயல்களை செய்திருக்கிறார் என்பதற்கு இந்த விழா எடுத்துக் காட்டு. அவர் உபயோகத்திற்கென்று அவருக்கு சைக்கிளை அன்பளிப்பாக அளித்திடும் வாய்ப்பினை எனக்கு அளித்ததற்கு நன்றி தெரிவித்தும், அவர்களுக்கு என் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பருக்கு சைக்கிளை அளித்திடும் இந்த நேரத்தில் எனக்கு பழைய நினைவு வருகிறது! இப்போது சைக்கிள் விடுகின்ற வலிமை எனக்கு இல்லையென்றாலும், பல ஆண்டுகளுக்கு முன்பு நல்ல சைக்கிள் வேண்டுமென்று ஆசைப்பட்டேன்.

நான் பத்தாவது படிக்கின்றபோது சைக்கிள் வேண்டுமென்று எங்கள் வீட்டிலே கேட்டேன், அப்போது எனக்கு கிடைத்த சைக்கிள், பழைய சைக்கிள்! வரதன் நல்ல அதிர்ஷ்டசாலி—புதிய சைக்கிளே கிடைத்திருக்கிறது!

ஊர் மக்கள், உள்ளன்போடு இதைப் பயன்படுத்திக் கொள்ள அவருககு அளிப்பதிலே மகிழ்ச்சியடைகிறார்கள்! நண்பர் வரதனும் பெற்றுக் கொள்வதிலே மகிழ்ச்சியடைகிறார்!

இதை உபயோகப்படுத்தும் தன்மை நாட்டு மக்கள் நல்வாழ்வுக்கு பயன்படுகிறது என்றால், பார்க்கின்றவர்கள் இப்போது அடைகின்ற பெருமையைக் காட்டிலும் அப்போது மகிழ்ச்சியடைவார்கள்!

இந்தப் பகுதியில் திராவிட முன்னேற்றக் கழகம் வலிவு பெற பணியாற்றி வரும் மாநகராட்சி மன்ற உறுப்பினர் நமது தோழர் வரதனைப் போல் பலர் நமக்கு தேவை!

கொள்கையை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டு வரும் இவரைப் போல் நல்ல தொண்டர்கள், அருமையான ஊழியர்கள் நமக்குத் தேவை!

வட்டாரத்திற்கு வட்டாரம் பேராதரவு இருந்தால் மட்டும் போதாது! வீதிக்கு வீதி நமது கொள்கையை புரிந்தவர்கள் இருந்தால் மட்டும் போதாது! நமது லட்சியத்தை புரிந்தவர்கள் அறிந்தவர்கள் வீட்டுக்கொருவர் நமக்கு வேண்டும்! அப்படிப்பட்டவர்கள் வந்தால் தான் நாம் எடுத்துச் சொல்லும் நல்ல கருத்துக்கள் பரவும்!

ஹோட்டலில் வெந்ததாக இருந்தாலும், வேகாததாக இருந்தாலும் இட்டிலியை சாப்பிடுகிறார்கள்! தெருக் கோடியில் கிடைக்கும் ஆப்பம் அருமையாக இருந்தாலும், அதை வாங்குவது கேவலம் என்று கருதுகிறார்கள்! ஆப்பத்தை வாங்குவதில்லை!

ஓட்டல் இட்டிலி வேகாமல் இருந்தால் கூட சாப்பிடுகிறார்கள். காரணமென்ன? நாலு பேர் சொல்லாமல் இருக்கும் போது நாம் மட்டும் சொல்லலாமா என்று கருதி சொல்லாமல் விட்டு விடுவது நம் பழக்கம்!

வேகாத பண்டத்தை கௌரவத்திற்காகச் சாப்பிட்டு விட்டு பேசாமல் இருப்பது போல் காங்கிரஸ் கொள்கை வேகாத பண்டமாக இருந்தாலும் கௌரவத்திற்காக பேசாமல் இருக்கிறார்கள்.

நமது கழகம் ஆப்பக் கடையைப் போல் இருக்கிறது! பஞ்சை, பராரிகள் சொல்லுகின்ற கருத்தை கேட்கலாமா என்று நினைக்கிறார்கள்! ஆப்பத்தை சாப்பிட விரும்புகின்றவர்கள் வீட்டில் இருக்கும் சின்ன பையனைக் கூப்பிட்டு. 'தெருக் கோடியிலே இருக்கும் ஆப்பக் கடையில் நாலு ஆப்பம் வாங்கி வா' என்று சொல்லி யனுப்புவார்கள், பையன் வாங்கிக் கொண்டு வந்து விட்டதும் 'வாங்கி விட்டேன்' என்று கூச்சல் போட்டாலும் 'சத்தம் போடாதே' 'வா வா' என்று அழைப்பார்கள்! முதன் முதலில் சிறுவர்களை விட்டு ஆப்பம் வாங்கிவரச் சொல்லுவதைப் போல் நீங்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள். முதலில் பெரியவர்கள் வரத்தயங்கினாலும் பிறகு நம் பேச்சை கேட்கலாமென்று கருதுகிறார்கள்!

இதற்கு காரணமென்ன? காங்கிரஸ், சமுதாயத்திலே செல்வாகககு பெற்றிருக்கிறது! அவர்கள் கட்சியில் மிட்டாதார்கள் இருக்கிறார்கள்! மிராசுதார்கள் இருக்கிறார்கள்! ஜமீன்தார்கள் இருக்கிறார்கள்! பட்டம் பதவி பெற்றவர்கள் அக்கட்சியில் இருக்கிறார்கள்! நம் கட்சியில் சைக்கிள் வாங்கிக் கொடுத்தால் பெற்றுக்கொள்ளக் கூடியவர்கள் இருக்கிறார்கள்! காங்கிரசில் வாங்கிக் கொடுக்கிறவர்கள் இருக்கிறார்கள்!

காஞ்சிபுரத்தில் நான் தேர்தலில் நின்றபோது, காங்கிரஸ்காரர்கள் என்னை தோற்கடிப்பதற்காக ஐம்பது புதிய சைக்கிளை வாங்கி காங்கிரஸ் தொண்டர்களுக்கு கொடுத்தார்கள்! கிராமங்களுக்குச் சென்று அந்தத் தொண்டர்கள் 'அண்ணாத்துரைக்கு ஓட்டுப் போடாதே'! என்று சொன்னார்கள். 'காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள்' என்று கூட அவர்கள் அங்கு சொல்லவில்லை!

காங்கிரசில் சைக்கிள் வாங்கிக் கொடுக்கிறவர்கள் இருக்கிறார்கள். அதனால் தான் கழகத்தை ஆப்பக்கடை என்றேன். அதை ஹோட்டல் என்று கூறினேன்.

காஞ்சிபுரத்தில் இருக்கின்ற பணக்கார வாலிபர்கள், வீட்டு பலகாரத்தை சாப்பிடாமல் ஆண்டர்சன் பேட்டையிலே உள்ள காபிஓட்டலுக்குத்தான் செல்வார்கள்! மனைவியே காபி போட்டுக் கொடுத்தாலும்—மனைவி

(6-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளர்களை விளையாட்டுக் கருவிகளாக்க மாட்டோம்!

போட்டி சங்கத்தை ஏற்படுத்தி தொழிலாளர்களை பிளவுபடுத்தும் இழிக் குணம் எங்களுக்கு இல்லை!

தொழிலாளர்களிடையே நெடுஞ்செழியன் விளக்க உரை!

22-12-59ம் தேதியன்று மாலை சென்னை பெரியமெட்டில் அரசாங்க மருத்துவ சுகாதார ஊழியர்கள் சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டம் சங்கத்தின் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது

முதலில் சங்கத்தின் செயலாளர் எஸ். கே. சாமுவேல் சங்கத்தின் நோக்கம் பற்றியும், மருத்துவ சுகாதார ஊழியர்களின் குறைகள் பற்றியும், 10—15 ஆண்டுகளாக ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் தொழிலாளர்களை நிரந்தரமாக்-த்திருப்பதைப் பற்றியும், சம்பளத்தில் சென்னையிலிருக்கும் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் ஆஸ்பத்திரிக்கு, ஆஸ்பத்திரி வித்தியாசங்களையும் மற்றும் பல குறையீடுகளையும், சம்பளக் கமிஷன் அறிக்கைப்படி சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் பேசினர்.

பின் திரு. என், கே. பழனிச்சாமி எம்.எல்.ஏ. பேசும் போது 4 வருடங்களாக இச் சங்கம் நல்ல முறையில் வேலை செய்யாது, தொழிலாளர்கள் குறைகள் நீக்கப்படாமலும், அவர்களுக்கு ஆஸ்பத்திரிகளின் அதிகாரிகள் இழைத்து வந்ததைப் போக்காதும், தொழிலாளர்களின் குறைகளைப் போக்கவும், சம்பளக் கமிஷன் சிபாரிசுப்படி சம்பளம் பெறவும் பாடுபடாதிருந்து வந்ததைப் போக்கி புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்து நல்ல வேலைகள் செய்து வருகிருர்கள் என்றும் சென்னை நகரிலுள்ள ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் பெரும்பாலோர் சேர்ந்து முன்னுள் தலைவர் திரு. ஆதித்தன் சரியாகப் பணியாற்றவில்லையென்று கருதி திரு. நெடுஞ்செழியனைத் தலைவராகத் தேர்ந்து பணியாற்றி வருகிறது. இதைக் கண்டு இப்பொழுது இங்கு திரு. ஆதித்தனின் கையாள் ஒருவர் இப்பொழுது ஒரு சீட்டுக் கொடுத்து என்னையும், திரு. நெடுஞ்செழியனையும், கருங்காலி என்றும், ஐந்தாம் படை என்றும் தூற்றியிருக்கிருர், இந்த சங்கத்தில் 5000 பேர்கள் இருக்கிருர்கள் இந்த குறுகிய காலத்தில் பல குறைபாடுகள் நீக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் கூற்றுக்குக் கவலை இல்லை என்றும் பேசினர்.

பின் நகர மன்ற உறுப்பினர் எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பிராவிடெண்டு பண்டு, கிராஜியூட்டு, வீட்டு வசதி, நிரந்தரமாக்குதல், அதிகாரிகள் தொழிலாளர்களிடம் நடந்து கொள்ளும் விதம் இவ்வகைகள் பற்றிப் பேசினர்.



பின் நாவலர் நெடுஞ்செழியன் பேசியதாவது:—

அன்புள்ள பெரியோர்களே! நண்பர்களே! தொழிலாளர் நண்பர்களே! தாய்மார்களே!

எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் சாமுவேல், பழனிச்சாமி, கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்கள் நமது சங்கம் ஆற்றிவரும் பணிகளையும். நமது குறைபாடுகளையும், அதைக் களைய வேண்டிய வகைகளைப்பற்றி மிகவும் தெளிவாகவும், அழகாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் பேசினர்கள்.

இந்தக் கூட்டத்திற்கு நமது அண்ணு அவர்கள் பேச வேண்டுமென்று நானும். நமது நண்பர்களும் வேண்டினேம். வந்து பேசுவதாக இசைவு தந்தார்கள்.

சொந்த அலுவல்கள் காரணமாக அவசரமாக காஞ்சிபுரம் சென்றிருக்கிருர் உடனே திரும்பி வந்து விடுவதாகக் கூறிச் சென்ருர் அவர் வந்திருப்பார் என்றெண்ணியே அவரை அழைத்து வர அவர் இல்லம் சென்றேன் வரவில்லை. வந்ததும் அழைத்து வரலாமென்று காத்திருந்தேன் வரவில்லை. குறித்தபடி தாமதமின்றி கூட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று வந்து விட்டேன். அண்ணு அவர்களை அழைத்துவரச் சென்றதாலேயே சிறிது தாமதமாகக் கூட்டம் ஆரம்பிக்க வேண்டியதாகி விட்டது,

அவர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டால், சென்ற அலுவல் முடியாததாலேயே இருக்கலாம். மற்றும் நானிருக்கிறேன் நான் கவனித்துக் கொள்வேன் என்ற எண்ணத்தாலேயே இருக்கும். "தம்பி உடையான் படைக் கஞ்சான்" என்கின்ற மூதுரைப்படி தம்பியாகிய நான் பார்த்துக் கொள்வேன் என்றே வராதிருக்கலாம்.

நான் இங்கு எதை எதைப் பேசக் கூடாது, பேச வேண்டாம் என்று எண்ணினேனே, அதையே நண்பர்களுக்கும் கூறி, நமது பணிகளை மட்டும் பேசுங்கள் மற்றவர்களைப் பற்றி பேச வேண்டாம் கவலைப்பட வேண்டாம் என்று கூறினேன் அவைகளையெல்லாம் பேசும்படியான நிலைக்கு என்னை ஆளாக்கி விட்டார்கள். அந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அந்த சூழ்நிலையை உருவாக்கி விட்டார்கள்,

நான் யார் என்பதை அறிவீர்கள். சென்ற பதின்மூன்ருண்டுகளாய் எனது பொதுப் பணியையும், எனது கொள்கைகளையும், நோக்கத்தையும் நன்கு அறிவீர்கள்.

நண்பர் சாமுவேல், நான் கூறியபடி சங்கம் சாதித்ததையும், சாதிக்கப் போவதையும், குறைகளையும், அதைக் களைய வேண்டியதையும் மட்டும் பேசினர். ஆனல் ஒரு நண்பர் ஒரு சீட்டு எனக்கும் நண்பர் பழனிச்சாமிக்கும் அனுப்பியுள்ளார் அந்த சீட்டைப் பார்த்ததும் நண்பர் சாமுவேலுவிடம் கூறியதற்கு மாருகப் பேச வேண்டிய நிலைக்கு வரவேண்டியதாயிற்று.

அந்த சீட்டில் அந்த நண்பர் கேட்கிருர்—

சென்ற 22—9—59ல் நடந்த ஒரு கூட்டத்தில் தாங்கள் பேசும் போது தொழிலாளர்களிடையே போட்டி சங்கம் ஏற்பட்டால் அவற்றில் பொறுப்பேற்க மாட்டேன் என்று பேசிவிட்டு, கருங்காலிகளுடன் சேர்ந்து பொறுப்பேற்று விட்டீர்களே இது சரியா"?

என்று எழுதியிருக்கிருர். அதே போன்று தான் நண்பர் பழனிச்சாமி அவர்களுக்கும் எழுதியிருக்கிருர் அதில்,

"நீங்கள் பல நாட்களாகக் கனவு கொண்டிருந்த போட்டி சங்கம் அமைத்து ஐந்தாம் படை வேலை செய்து வருகிறீர்களே சரியா என்பதாகும்.

(9-ம் பக்கம் பார்க்க)

6 மாதங்களில் நகர மன்றத்தில் நாம் சாதித்ததென்ன?

நிதிக் குழுத் தலைவர் வி. முனுசாமி காட்டும் புள்ளி விவரங்கள்!

20--12—59-ம் தேதியன்று கொத்தவால் சாவடிக்கருகிலுள்ள அண்ணாப் பிள்ளைத்தெருவில் 19-வது வட்ட தி. மு. க, சார்பிலும், தமிழர் திருநாள்விழா குழு சார்பிலும் நடைபெற்ற மேயர்—துணை மேயர் பாராட்டுக் கூட்டத்தில் நகர மன்ற நிதிக் குழுத் தலைவர் திரு. வி. முனுசாமி அவர்கள் பேசியதாவது;



அன்புள்ள தலைவர் அவர்களே! மாண்புமிக்க மேயர் அவர்களே! துணை மேயர் அவர்களே! நண்பர்களே! தாய்மார்களே!

நமது நகர மன்றத்திற்கு புதிதாகத் தேர்ந்தெடுத்துள்ள மேயர் அப்துல்காதர் அவர்களையும், துணை மேயர் தேவராசனையும் பாராட்டும் இந்தக் கூட்டத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு இந்த வட்டத்து முன்னேற்றக் கழகத்தாருக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

இங்கு நாம் நமது மேயரைப் பாராட்டக் கூடியிருக்கிறோம். பாராட்டி வருகிறோம். ஏன்? இந்த நகருக்கு பல மேயர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் பாராட்டும் நடந்திருக்கிறது. ஆனால், நாம் பாராட்டுவதற்கும், அவர்கள் பாராட்டுவதற்கும் மாறுபாடிருக்கிறது, வித்தியாசமிருக்கிறது.

நமது முதல் மேயர் அரசு அவர்கட்கும், இப்போதைய மேயர் அப்துல் காதர் அவர்கட்கும் கொடுக்கும் பாராட்டுகளையும், வரவேற்புகளையும் கண்டு நமது எதிரிகள் வயிற்றெரிச்சல் படுகிறார்கள். நம்மை தாறுமாறாகத் தூற்றுகிறார்கள். நமது மேயர்கள் மக்கள் மத்தியில் பழகி அவர்களோடு இணைந்திருக்கிறார்கள்,

சென்னைக்கு ஏறக்குறைய 272 ஆண்டுகளுக்கு முன் நகர சபை என்ற பெயரால் ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டது, அதனால் நகரிலுள்ள மக்களுக்கு தண்ணீர், சுகாதாரம், ரோடு, விளக்கு வசதிகள் கவனித்து வரப்பட்டது, அப்போது டைரக்டர் என்ற பெயரால் வெள்ளையரின் நேர் பார்வையில் இயங்கி வந்தது. பின் செனட்டர்கள் என்ற பெயரால் சிலர் அங்கம் வகித்து வந்தார்கள். பின் அதிகாரிகள் சிலரையும், அதிகாரப் பற்றற்றவர்கள் சிலரையும் நியமித்து நகராட்சி நடந்து வந்தது. இந்த நகராட்சியில் முதலில் டைரக்டர், செனட்டர், பிரசிடெண்ட் என்ற பெயரால் தலைவர்கள் இருந்து வந்தார்கள். சம்பளம் பெறும்படியான தலைவர்களும், சம்பளமில்லாத தலைவர்களும், டைரக்டர்களுமிருந்து வந்தார்கள்,

1919-ம் ஆண்டுதான் சென்னை மாநகர மன்றம் என்றபெயரிடப்பட்டது! அப்பொழுதெல்லாம் பிரசிடெண்ட் (தலைவர்) என்றுதான் இருந்தது! பின் பிரசிடெண்ட் மாறி மேயர் என்ற பெயர் வழங்கப்பட்டது. அதற்குப்பின் சுமார் இருபது, முப்பது மேயர்கள் வந்து விட்டார்கள் முதல் முதல் குமார ராஜா என்று அழைக்கப்பட்டு வந்த இன்றய ராஜா சர். முத்தைய்யா செட்டியார் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதிலிருந்து பலமேயர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அதற்குப்பின் நமது மேயர்களும் துணை மேயர்களும், தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் பழைய மேயர்கட்கும், நமது மேயர்கட்கும் பலத்த வித்தியாசமிருக்கிறது. வரவேற்பிலும், அதற்கு மாறுபாடுகளிருக்கின்றன. அப்பொழுதெல்லாம் மாலை வேலைகளில் பிரபலமான ஓட்டல்களில் பல மாளிகைகளில், பெரிய மனிதர்களின் பங்களாக்களில், அரண்மனைகளில் விருந்துகளும், ஆடம்பரங்களும், ஆட்டங்களும் நடைபெற்று வரும், அவைகளில் கலந்து கொள்பவர்களின் தரத்தைப் பார்த்தால் உயர்ந்த அதிகாரிகள், ராஜாக்கள், மிட்டாக்கள், மிராசுதார்கள், பெரிய மனிதர்கள் அமர்ந்திருப்பார்கள். அந்த நிலை வேறு! ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தார் மேயராகத் தேர்ந்தெடுத்தபின், நமது அரசு அவர்கட்கும். இப்போது காதர் அவர்கட்கும் நடக்கும் வரவேற்புகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நாள் தவறாது வட்டத்துக்கு வட்டம், தெருக்களிலும், சந்துகளிலும், மக்கள் கூடுமிடங்களிலும் வரவேற்புகள் நடைபெறுகின்றன. இதைக் கண்டு காங்கிரசார் கோபமும், வயிற்றெரிச்சலும் அடைகிறார்கள். சென்னையிலிருந்து கன்னியாகுமரிவரையில் வரவேற்புகளும், கூட்டங்களும் நடக்கிறது. பாராட்டப்படுகிறது. லட்சக்கணக்கான மக்கள் கூடிமேயர்களைவரவேற்பதுடன் காங்கிரசார் ஏழைகளுக்குச் செய்ய தவறியதையும் பணக்காரர்களுக்கு அவர்கள் செய்த சலுகைகளையும், கூட்டம் கூட்டி எடுத்துப் பேசுகிறார்கள். நடைபாதைகளில் வாழ்வோரும், குடிசையில் வாழ்வோரும் வந்து கூடுகிறார்கள். இதைக் கண்டு, பொருமையும், வெறுப்பும் அடைந்து தூற்றுகிறார்கள். அதைப் பற்றி நாம் கவலைப் படத் தேவையில்லை, நாம் நகர மன்றத்திற்கு வந்தால் ஏழை மக்களுக்கும், சாமான்யர்களுக்கும் நன்மை கிடைக்குமென்று நம்பி நம்மை தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். நாம் 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை உறுப்பினராகவும், மேயர்களாகவும் இருப்போம். இந்த நாளில் நாம் சேரிகளில் வாழ்வோரையும், நடைபாதையில் வாழ்வோரையும், சாலைகளில், ரோடு ஓரங்களில வாழ்வோரையும், ஏழை மக்களையும் நாம் மறக்க மாட்டோம். நம்மால் முடிந்தவரை அவர்களுக்கு நன்மை செய்து வருவோம். ஏழை மக்களையும் அவர்கள் குடும்பங்களையும், நமக்கு வாக்களித்து, சென்னை நகர மன்றத்திற்கு அனுப்பியவர்களுக்கு உதவுவோம், அவர்கள் குறைகளைப் போக்குவோம். மறக்க மாட்டோம், திராவிட முன்னேற்றக் கழகத்தில் செல்வவான்கள் இல்லை, பூமான்களும், சீமான்களும் இல்லை. கடந்த 7 மாதங்களில் நாம் இவர்கட்கெல்லாம் பல நன்மைகள் செய்திருக்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் பணியாற்றி வரும் நாம் அவரது ஆணைப்படியும் ஆலோசனைப்படியும் ஏழைகளுக்குப் பணிபுரிவோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் புதிதாக நகர மன்றத்தில் புகுந்திருக்கிறது—நகர மன்றங்களில் அரசியல் கட்சிகள் புகக்கூடாது என்ற கொள்கைப்படி நாம் 16 ஆண்டுகளாக கழகத்தின் பெயரால் புகவில்லை. சட்ட மன்றத்தில்கூட நமது அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது நகர மன்றங்களில் அரசியல் கட்சிகளின் பெயரால் தேர்தலில் நிற்கக்கூடாதென்று கூறினார். காங்கிரசார் கேட்கவில்லை அவர்கள் நிற்பதாக முடிவு செய்தனர். ஆனால் ஜனநாயகத்தைக் காப்பதற்கும், அவர்களை எதிர்ப்பின்றி ஏகபோகமாக ஆதிக்கம் செய்து கொண்டு வாக்காளர்களின் குறைகளை கவனியாது இருப்பதையும் நீக்க நாம் தேர்தலில் நின்றோம். மக்கள் நமக்குப் பெருவாரியாக வாக்களித்து நம்மை ஆதரித்து அனுப்பினார்கள், நாம் சென்று வீர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம். அங்கு போய் நிலைமையை ஆராய்ந்தோம். அவர்கள் செய்து முடித்த காரியங்களையும், செய்ய முடியாது விட்டவைகளையும், பண நிலைமைகளையும் ஆராய்ந்து பார்த்தோம். 15 ஆண்டுகளில் அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள், வரிகள் போடுவதில் ஒழுங்காக நடந்திருக்கிறார்களா? ஏழைகளுக்குப் பாதகம் ஏற்படாத வகையிலும், பணக்காரர்கட்குச் சலுகை ஏற்படாத முறையிலும் நடந்துள்ளார்களா என்று பார்த்தோம்.

முதன் முதலாக வருமானங்கள் எந்தெந்த வகைகளில் நகர மன்றத்துக்கு வருகிறது என்று பார்த்தோம். சென்னை நகர மன்றத்திற்கு வருடமொன்றிற்கு 3 கோடி 30 லட்சம், பல வகையான வரிகள் மூலம் வருகிறது என்பதறிந்தோம். வீடுகளின்பேரில் வரும் வரிகள் மூலம் 1 கோடியே 60 லட்சம் வருகிறது என்பதைப் பார்த்தோம். இது யார் யாரிடம் வசூலிக்கப்படுகிறது. சொத்து வைத்துள்ள பிரபுக்கள் செல்வாக்குள்ளவர்களிடம், செல்வந்தர்களிடம், அதிகமான வீடுள்ளவர்களிடமும், வாடகை அதிகம் வசூலிப்பவர்களிடமும் சரியாக வசூலிக்கப்படுகிறதா? வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாரபட்சமும், தயவு தாட்சண்யமுமின்றி வரிகள் போடப்பட்டு வசூலிககப்படுகிறதா, என்பதையும் கவனமாகப் பார்த்தோம். சொத்துக்களின் மீது விதிக்கப்பட்ட வரிகள் 1 கோடியே 73 லட்ச ரூபாய் வருகிறது என்பதையும் பார்த்தோம். இது சரியாக வசூலிக்கப்படுகிறதா? தாரதம்மியமில்லாது சட்டப்படி வசூலிக்கப்படுகிறதா என்று பரிசீலித்தோம், அதில் உண்மையான முறைகளில் வரி விதிக்கப்பட்டிருக்கிறதா முறைகேடுகள் இருக்கிறதா என்று பார்த்தோம். 50 ரூபாயும், அதற்குக் குறைவான விகிதங்களில் வரி இருப்பதை ஒரு பிரிவாகவும் 50 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரை இருக்கும் வரி விகிதங்களை ஒரு பிரிவாகவும், 1000 ரூபாயிலிருந்து அதற்குமேல் இருப்பதை ஒரு பிரிவாகவும் ஆக 'மூன்று பிரிவுகளாகப் பிரித்தோம்.

வரி கட்டாமலிருப்பவர்களைப் பற்றியும் புள்ளி விபரங்கள் தயாரித்தோம். 50 ரூபாயும் அதற்குக் குறைவாக வரி வசூலிக்கப்படும் வீடுகள் 48,000மும், 1000 ரூபாய்க்கு உட்பட்ட வீடுகள் 14000மும், 1000 ரூபாய்க்கு மேற்பட்டது 89,000 வீடுகள் என்றும் கணக்குகளில் காணப்பட்டது. மொத்த வரிகளைப் பார்க்கும்போது எங்கட்குக் கவலையும், பீதியும் ஏற்பட்டது. இதில் ஏதோ தவறுகள், தகாத காரியங்கள், தப்புகள் நடப்பதாக அறிந்தோம்.

(8-ம் பக்கம் பார்க்க)

மல்லிகைச் செடி நட வேண்டுமென்ருல் மண்ணைக் கிளறத் தான் வேண்டும்!

மாற்ருர் நம் மனம் நோகநோகப் பேசினுலும் அச்சப்படாதீர்! அருவெறுப்படையாதீர்!

[அண்ணு பேச்சு]

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பார்த்து 'காபியா, நீ போட்டதா—அதை நீயே குடி' என்று சொல்லி, வீட்டு பண்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஹோட்டல் பண்டத்தை நாடிச் செல்லுவதைப் போல் இங்கே சொல்லி வருகின்ற நமது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமல், எங்கோ இருந்து வந்த காங்கிரசின் கொள்கை அவர்களுக்கு இனிப்பாகப்படுகிறது!

நம்மவர்கள் பேசினுல் 'இதுதானு?' இல்லாததை என்ன இவர்கள் சொல்லிவிட்டார்கள்? முனுசாமி பேசினுர்-என்னத்தை பேசிவிட்டார்—இவ்வளவுதானு என்பார்கள்!

வேறு யாராவது—'நான் நினைத்தால் வானம் மழை பொழியும். எங்கே மழை வேண்டுமென்று கூறுகிறீர்களோ, அங்கே மழை பெய்யச் செய்கிறேன்' என்று சொன்னுல் அவன் தான் மனுஷன்! என்பார்கள்!

நம்முடைய சரக்கு நல்ல சரக்கு தான்! விற்கும் ஆளைப் பொருத்து இருக்கிறது, சரக்கின் தன்மை! செட்டியார் மிடுக்கா, சரக்கு மிடுக்கா என்பார்கள். அது போல் நமது கொள்கையின் வளர்ச்சி சொல்லுகின்ற முறையிலே தான் இருக்கிறது!

படம் பார்க்கிறவர்கள் அனேகர் இங்கே இருக்கின்றீர்கள். பார்க்கிற தமிழ் படம் பிடிக்கவில்லை என்ருல் 'எவண்டா இதை எடுத்தவன்-எவன் இதை டைரக்ட் செய்தவன், ஏன் இப்படி காசை கரியாக்குகிருன்!' என்று கூறுவார்கள்.

நான் எத்தனையோ, ஆங்கிலப் படங்களை பார்த்திருக்கிறேன். தமிழ் படத்தை விட் மோசமான படங்களையும் பார்த்திருக்கிறேன். அந்தப் படத்தை பார்க்கிற போது உற்று உற்றுப் பார்த்தேன் தமிழ் படத்திலே உள்ள நடிகர்களைப் போல முகவெட்டு இல்லை படத்தில் பாடுகிற பாட்டைப் போல இனிமையாகக் கூட இல்லை—சில படங்களில் நல்ல நடிப்பைக் கூட பார்க்க முடியவில்லை, அந்தப் படங்களை பார்க்கிற போது அங்கே உள்ளவர்கள் தங்களது அதிருப்தியை தெரியப்படுத்துவதில்லை!

இவ்வளவு பேர் சும்மா இருக்கும் போது நாம் மட்டும் ஏன் அதிருப்தியைக் காட்டிக் கொள்ள வேண்டுமென்று நினைத்து பேசாமல் இருக்கிருர்கள்.

தமிழ் படத்தை பார்க்கிற போதும் குற்றத்தை சொல்லுகிருேம், காரணமென்ன?

தமிழ் படத்தயாரிப்பாளர்கள் நமது சொந்தக்காரர்கள், குற்றம் கூறுகிருேம்.

ஆங்கிலப் படங்களுக்குக் குற்றம் சொல்லுவதில்லை. ஏன். அவன் அந்நியன்! அதைப் போல் தான் காங்கிரஸ் கட்சி அந்நியக் கட்சி, ஆகவே தான் குறை கூறுவதற்கு பதிலாக போற்றுகிருர்கள்!

நமது கட்சி சொந்தக் கட்சி! மாசு இல்லையென்ருலும் 'பார்! பார்! இவர்கள் நாட்டைப் பிரிக்கச் சொல்லுகிருர்கள், இது ஒரு கட்சியாகுமா?' என்று கூறுகிருர்கள்.

ஆகையினுல் தான் மாற்ருர் எதிர்த்துப் பேசினுலும் நாம் திருப்பிப் பேசக்கூடாது என்று தோழர்களைக் கேட்டுக் கொள்வது! நமது கழகம் சொந்தக் கழகமாக இருப்பதால் தான் குறை கூறுகிருர்கள்! எதிர் வீட்டுக்காரனின் மனைவியைப் பார்த்து குற்றங் குறை சொல்ல முடியாது! நம் மனைவியைத் தான் குற்றம் சொல்ல முடியும்!

நமது கட்சி சொந்தமான கட்சி! அது அந்நியக் கட்சி! இந்தக் கழகம் உங்கள் நாட்டுக் கழகம்! இது உங்கள் வீட்டுக் கழகம்!

காங்கிரஸ் வடக்கே இருந்து வந்த கட்சி! வடநாட்டுக்காரர்கள் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கிற கட்சி! இதைச் சொல்கிறபோது காங்கிரஸ் காரர்கள் 'பார், பார்! இந்த அண்ணுத்துரை அண்டப் புளுகு புளுகுகிருன். காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக இருப்பவர் ஆந்திரத்தைச் சேர்ந்த சஞ்சீவ ரெட்டி! இது எப்படி வடநாட்டுக் கட்சியாகும்! என்று கேட்கக் கூடும்!

கட்சியின் தலைவராக சஞ்சீவ ரெட்டி அவர்கள் இருந்தாலும், அதை நடத்திச் செல்கின்ற அதிகாரம், பணபலம் வடக்கே தான் இருக்கிறது!

காங்கிரஸ் கட்சி வடக்கே உள்ளவர்களால் நடத்தப் படுகின்ற கட்சி! நம் கழகம் இங்கே உள்ளவர்களால், இங்கேயே நடத்துகின்ற கட்சி..

இங்கே இருப்பது சொந்தக் கட்சி! அங்கே இருப்பது அந்நியக் கட்சி!!

அதுபோல் அது ஹோட்டல்—இது ஆப்பக்கடை!

தின்று பார்த்தால் தான் ஆப்பம் இனிக்கும்! நம் கழகக்கூட்டம் கேட்டால் தான் சுவைக்கும்! கொள்கை விளங்கும்!!

இப்போது இன்னென்றும் காங்கிரஸ்காரர்கள் கூறி வருகிருர்கள். 'தி. மு, க. மேயர் எப்படி வந்தார் தெரியுமா? பணத்தைக் கொடுத்து வெற்றி பெற்ருர்கள்' என்றும் கூறுகிருர்கள்!

நாம் பணம் கொடுத்தா வெற்றி பெற்ருேம்? உண்மைக்காக அல்ல! வாதத்திற்காக எடுத்துக் கொள்வோம்! பணம் வாங்கியவாகள் எங்கே இருக்கிருர்கள். பணம் கொடுத்தால் வாங்கலாமா?

'எல்வளாவா பெரிய மனிதர்! அவர் கைபிடித்து 'அழைக்கிற போது மறுக்க முடியுமா என்று கூறுகிறவளை பத்தினி என்று கூறமுடியுமா?

அதுபோல் பணம் கொடுத்தாலும் அவர்கள் வாங்கியிருக்கலாமா?

நமது கழகம், சொந்த வீட்டைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள், அடுத்தவீட்டை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறுகிறது!

ஜேப்பியர் பார்க்கில் நடைபெற்ற கூட்டத்தில்—

'இதுவரை தேர்தலில் காங்கிரஸ்காரர்கள்ஒருமுறையைக் கையாண்டு வந்தார்கள். அந்த ஒரு முறையை நாமும் கையாண்டு பார்த்தோம். அதில் வெற்றி பெற்ருேம்! இந்த முறை நீடிக்கக் கூடாது' என்று சொன்னேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ஆறு பேர் வந்து கொண்டிருக்கிருர்கள். அவர்கள் கல்கத்தாவுக்கும் பம்பாய்க்கும் போகப் போகிறீர்கள்' என்று உங்கள் பத்திரிகை எழுத வில்லையா? படித்த பின்னும் இளித்த வாயர்களாக இருக்க முடியுமா?

எங்கள் தோழர்கள் உங்கள் பக்கத்திலே இழுத்து விடலாமென்று நினைத்தீர்கள்! நீங்கள் எங்களை கேவலப் படுத்த முயன்றீர்கள், நீங்கள் கையாண்ட முறை எனக்குத் தெரிந்த முறை தான்!

(7ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

பொங்கல் மலர்

★

அறிஞர் அண்ணு அவர்களின்
சிறப்புரையுடன்

நாவலர் நெடுஞ்செழியன்
கலைஞர் கருணுநிதி
பேராசிரியர் க. அன்பழகன்
'தாய்நாடு' ஆசிரியர் டி. கே. சீனுவாசன்
இரா. செழியன்

மற்றும் பல கலைஞர்களின் கருத்துக்குவியல்களோடு இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே கிடைக்கும்.

முகப்பை இரு வண்ணத்தில்
அறிஞரும், நாவலரும் அலங்கரிப்பர்!

விலை 30 காசுகள்

தேவையான இதழ்களுக்கு முன்னதாகவே முன் பணத்துடன் எழுதுக.

மாலைமணி
சென்னை-14.

காங்கிரஸ்காரர்கள் உள்ளத்திலேயும் நமது கொள்கை பதிய வேண்டும்!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

(அண்ணா பேச்சு)

வரதன் ஏழை இழுத்த இழப்புக்கு வந்து விடுவார் என்றுஎண்ணிக் கொண்டு அவருக்கு ஒரு சைக்கிளுக்குப்பதிலாசு ஒரு ஸ்கூருட்டரை வாங்கிக் கொடுத்திருந்தால் நேராக என் வீட்டிற்கு வந்து அண்ணா! காங்கிரஸ்காரர் இந்த ஸ்கூருட்டரை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதை என்ன செய்வது என்று கேட்பார்! அதை பயன்படுத்திக் கொண்டிருக்க மாட்டார்,

நேப்பியர் பார்க்கிலே கூறினேன். நமது பந்தமும் பாசமும் ரத்தத்தோடு ரத்தம் கலந்தது கண்ணீரோடுகண்ணீர் கலந்தது

நேரு சென்னைக்குவந்தபோது போலீஸ் தடி அடிபட்டு வரதன் உடலிலே இருந்து சிந்தியரத்தம் முனுசாமியின் ரத்தத்தோடு கலந்தது. நமது பந்தமும் பாசமும் தியாகத்தால் ஒன்று பட்டது. நமக்கிருக்கும் பாசத்தை பணம் கொடுத்தா போக்கிக் கொள்ள முடியும்!

மேயர் நமக்கு கிடத்ததைவிட தோழர்கள் கட்டுப் பாடோடு நடந்து கொண்ட நல்ல தன்மையைக் கண்டு பூரிப்படைந்தேன்!

மேயர் தேர்தலில் நமக்கு கிடைத்த ஆறு ஓட்டுகள் இரவல் சரக்கு! நம்மவர்கள் யார் கூப்பிட்டாலும் போக மாட்டார்கள். நம்முடைய சரக்கு சொந்த சரக்கு!

தோழர் வரதனுக்கு அளித்திருக்கும் சைக்கிளை நல்ல முறையிலே பயன்படுத்த வேண்டும். பயன்படுத்துவார் என்ற நம்பிக்கை இருக்கிறது!

நண்பர் முனுசாமி பேசும் போது கார்ப்பரேஷனில் சாதித்தவைகளை பற்றி சொன்னார். தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறோம். சர்ககார் அனுமதி கொடுத்தால் செய்வோம் என்று சொன்னார், நீங்கள் அவர் சொன்னதைக்கேட்டு ஆராய்ச்சி செய்தால் ஏன் நகரசபையால் செய்ய முடியவில்லை என்பது புரியும்—

நகரசபைக்கு, குறிப்பிட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்குத்தான் அதிகாரம்இருக்கிறது. மற்ற அதிகாரங்கள் சட்டமன்றத்திலே இருத்கிறது!

உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன்—

தையல் இலைக்கும் தட்டுக்கும் உள்ள வித்தியாசம் தான் நகரசபைக்கும், சர்க்காருக்குமுள்ள வித்தியாசம்!

தையல் இலையில் சாப்பிடுகிற போது அவசரமாக சாப்பிட்டால் அதிலே உள்ள துப்பல் தொண்டையிலே அடைத்துக் கொள்ளும்!

கார்ப்பரேஷன் தையல் இலை சட்டசபை தட்டு!

அவர்கள் வைத்திருக்கிற தட்டு—வெறுந் தட்டு! அதில் டெல்லிக்காரன் தான் சோறு போட வேண்டும்!

சென்னை சர்க்கார் இடத்திலே இருக்கின்ற காலித் தட்டையேக் கேட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்!

கார்ப்பரேஷனுக்குக் அதிகாரம் படிப்படியாக வளர்ந்தால் இன்னும் அதிகமான வேலையை செய்வார்கள்.

அதிகாரம் வளர்ந்தால் இன்னும் அதிகமாக செய்யலாம் என்று சொன்னனே தவிர அதிகாரம் வரும் வரை காத்துக் கொண்டிருகக வேண்டும் என்று சொல்லவில்லை!

கார்ப்பரேஷனில் இருக்கும் நமது உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தெருவில் இருக்கிற குப்பைகளை எடுப்பதற்கு கூட கூச்சப்படக் கூடாது.

நண்பர் முனுசாமி இருக்கின்ற தொகுதிக்கு முன்பு கத்தையா ரங்கையா நாயுடு என்பவர் கௌன்சிலராக இருந்தார்!

தோற்றத்தில் மிகவும் கம்பீரமான உருவம்! அவர் தினமும் ஒவ்வொரு தெருவாக சுற்றிப் பார்த்து வருவார்! எங்காவது குப்பை இருந்தால் அதை அவரே எடுப்பாராம்! அவர் குப்பை எடுப்பதை பார்க்கிற, வீட்டுக்காரர் 'ஏன் எடுக்கிறீர்கள்' என்று கேட்பார்களாம்!

'இந்த வேலையைத் தானே கொடுத்திருக்கிறீர்கள்' என்று கூறுவாராம்! அதற்குப் பிறகு நாங்களே எடுத்து விடுகிறோம். இனிமேல் குப்பையை, குப்பைத் தொட்டியிலேயே போடுகிறோம் என்று கூறுவார்களாம். அப்படி வேலை செய்து நல்ல பெயர் எடுந்தவர் கத்தையா ரங்கய்யா நாயுடு!

அப்படிப்பட்ட நல்ல பெயரை நம்மவர்கள் எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட புகழ் தான் நமது கொள்கை வளர்வதற்கு செல்வாக்கை தரும்!

ரோடு போடுகிற போது நமது நகராட்சி மன்ற உறுப்பினர்கள் அங்கே நிற்கிறார்கள். சீக்கிரம் நடக்கட்டும் என்று நல்ல முறையில் வேலை வாங்குகிறார்கள்! வேலை வாங்குகிற போது நமது தோழர்கள் உடனிருப்பதை சில இடங்களில் பார்த்து மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். இப்படிப்பட்ட செயல்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும்!

சென்னை நகராட்சி மன்றத்திற்கு குறைந்த அதிகாரம் இருப்பதாக நண்பர் முனுசாமி கூறினார். நான் கூட மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் பற்றி வரும் சட்ட மன்றத்தில் பேசும் போது பேசுவேன். அதிகாரம் வரும் போது வரும்! கிடைத்திருக்கும் நல்ல பெயர்—கீர்த்தியும் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சியைச் சேரும்!

இப்போது பெற்றிருக்கும் புகழும் கீர்த்தியும் ஒன்றுக்கு பத்தாக ஓங்கி வளர வேண்டும்.

அதே நேரத்தில் புகழுக்குரிய நம் தோழர்கள் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் சொல்லவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் சொல்லுவதற்கு முன்னால், முதலில் சொன்ன ஓட்டல்-ஆப்பக் கடை உதாரணத்தை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்!

நமக்கு இப்போது இருக்கிற செல்வாக்கு போதாது, காங்கிரசை வீழ்த்தி விடுவதற்கு இப்போது இருக்கிற செல்வாக்கு போதுமென்று நமது தோழர்களும் கருதுகிறார்கள். நான் சொல்லுவேன், நமக்கு இப்போது இருக்கிற செல்வாக்கால் நாம் சொல்லி வருகின்ற நாட்டுப் பிரிவினைக் கொள்கை வெற்றி பெற போதாது!

காங்கிரசிலே இருக்கும் நூற்றுக்கு அறுபது பேர் நம் பக்கம் வரவேண்டும். நமது பிரச்சாரம் காங்கிரஸ்காரர்கள் உள்ளத்திலேயும் ஆழப்பதிய வேண்டும். அவர்களை புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டுமே தவிர அவர்களுக்கு எரிச்சல் வரும்படி செய்யக் கூடாது. அவர்களுக்கு கோபம் வரும்படி செய்யக் கூடாது.

காங்கிரசில், பழைய காங்கிரஸ்காரர்களும் இருக்கிறார்கள். உண்மையான காங்கிரஸ்காரர்களும் இருக்கிறார்கள்.

நாம் வடநாட்டவரை எதிர்த்து போராடி தடியடி பட்டது போல், காங்கிரசிலும் வெள்ளைக்காரன் ஆட்சியை எதிர்த்து போராடி தடியடிபட்டவர்களும் இருக்கிறார்கள்.

நம்மவர்களிலே சிறை சென்றது போல், அவர்களிலும் சிறை சென்றவர்களும் இருக்கிறார்கள்!

நம்மவர்களில் தியாகம் செய்தவர்கள் போல் காங்கிரசிலும் தியாகிகளும் இருக்கிறார்கள்!

அப்படி இருக்கிறவர்கள் காங்கிரஸ்கட்சியை நல்ல கட்சி என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் தேவை இல்லை என்றும் கருதிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களிடத்திலே இருக்கும் எண்ணத்தை மாற்ற வேண்டும்!

நமது கொள்கையை, பிரச்சாரத்தை அவர்களும் கேட்க வேண்டும்! பேசுகிறவர் அண்ணாத்துரையாக இருந்தாலும் சரி, வேறு யாராவது இருந்தாலும் சரி அவர்களும் கேட்க வேண்டும்.

"எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று வள்ளுவர் கூறியிருப்பது போல் காங்கிரசிலே உள்ள தியாகிகள் நமது பிரச்சாரத்தை கேட்டு சிந்திக்கின்ற மனப்பக்குவம் அவர்களுக்கு இருக்க வேண்டும்!

நாம் பேசுகின்ற பேச்சில் பக்குவம் வேண்டும்—பணிவு வேண்டும். ஆனால் எரிச்சலை உண்டாக்கக் கூடாது! பேசுகின்ற கூட்டத்தில் அவர்களுக்கு மன அரிப்பை உண்டாக்கும் விதத்தில் பேசக் கூடாது!

அவர்கள் திட்டினார்கள் என்ற காரணத்திற்காகஇரண்டுபேரும் திட்டிக் கொண்டால் சுத்தப் படுத்தாத சாக்கடையிலே இருந்து வெளிவரும் நாற்றம் போல் நாற்றமெடுக்கும்! இதைப் பார்க்கின்ற பொதுமக்கள் இவர்களை நல்லவர்கள் என்று நினைத்தோம். இப்படிப் பட்டவர்களா என்று நினைப்பார்கள்!

பேசுகிறபோது வேண்டுமானால் ஒரு தெம்பு இருக்கும்! பேசிவிட்டு திரும்புகிற போது ஒரு பெருமை இருக்கும். ஆனால் அப்படித் திருப்பி தாக்குவதில், கட்சி வளராது! கட்சி வளர வேண்டுமானால் இரண்டு பக்கத்திலும் காரண காரியங்களை விளக்க வேண்டும்.

மாற்றார்கள் நம் மனம் நோக நோகப் பேசினாலும் தாங்கிக் கொள்ள வேண்டும். மல்லிகை செடியைநடவேண்டுமானால்மண்ணைக் கிளறத்தான் வேண்டும்! மல்லிகை செடி நட்டால்தான்

(9-ம் பக்கம் பார்க்க)

15—1—60-ல் வெளிவருகிறது!

புத்தம் புது மலர்ச் செண்டாய்
பூரிப்புத் தரும் புது நிலவாய்
கலை உலகில் எழில் கொழிக்கும் ஏடு

வெள்ளித்திரை

(சினிமா வார இதழ்)

4 பக்கங்கள் விலை 7 காசுகள்

எங்கும் விற்பனையாளர்கள் தேவை.

விபரங்கட்கு:
நிர்வாகி, 'வெள்ளித்திரை'
பெரிய தெரு, சென்னை-5.

தொழில் வரி நீக்கினோம் - ஏழைகள் துயர் துடைத்தோம் !

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

(முனுசாமி பேச்சு)

சிந்தித்தோம், கணக்குகளை ஒத்திட்டுப் பார்த்தோம். நம்முடைய கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் யோசித்தோம். நமது தலைவர்களிடம் சென்று இது பற்றி தெரிவித்து ஆலோசனை கேட்டோம். அவர்கள் கூறினார்கள், ஏழைகளையும், சிறு வியாபாரிகள் சிறிய வீடுகள் வைத்து வாடகைக்கு விட்டு வைத்துள்ளவர்களைப் பாதிக்காத முறையிலும் அவர்களுக்கு வரிபளுவுகள் எந்தெந்தவகையில்குறைக்கமுடியுமோ குறையுங்கள், நகர மன்றத்தை தங்கள் செல்வாக்கால் ஏமாற்றி வரும் மாட மாளிகைக் காரர்களையும் அதிக வீடுகள் வைத்துக் கொண்டு நகர மன்றத்திற்கு வரிகளை சரிவர, நியாயமாகச் செலுத்தாதிருக்கும் செல்வந்தர்களையும் சும்மா விடாதீர்கள். அவர்கட்குச் சட்டப்படி எப்படி வரி விதிக்க முடியுமோ அப்படி விதியுங்கள். இதில் தயவு தாட்சண்யம் பார்க்காதீர்கள் என்று உத்திரவிட்டார்கள்.

உடனே நடவடிக்கையிலீடுபட்டோம். அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் 50 ரூபாய்க்குக் குறைவான வருவாயுள்ள வீடுகளுக்கு வரியைக் குறைக்கவும் முயற்சித்து வருகிறோம். இது அடுத்த ஏப்ரலில் செய்வோம், அதற்குள் என்ன செய்தீர்கள் என்று கேட்காதீர்கள். செய்ததையும், இனி செய்யப் போவதை பொறுத்திருந்து பாருங்கள், நாங்கள் வந்தபின்— வந்த வருமானங்கள். செலவுகள் செய்த காரியங்களை வரவு செலவுத் திட்டத்தின்போது அறிவிக்கிறோம். அதுவரை பொறுத்திருந்து பாருங்கள், அவசரப்படாதீர்கள். வரவு செலவுகளில் துண்டு விழுவதை சரி செய்வதையும், பிரபுக்கள், செல்வந்தர்கள், பணக்காரர்கள் முதலியவர்களிடம் சரிவர வசூலிப்பதற்கும் வேண்டி ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

நமது நகரில் மாநில சர்க்காருக்குச் சொந்தமானதும், மத்திய சர்க்காருக்குச் சொந்தமான பல கட்டடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களின் செலவினத்தில் 6 சதவிகிதம் சட்டப்படி வசூலிக்கப்படுகிறது. ஆனல், தனிப்பட்டவர்களின் நேரிடைப் பார்வையில் நடந்து வரும் பல தொழிற்சாலைக்கும், தொழில் அதிபர்கள் வீடுகளுக்கும், சர்க்காரிடமிருந்து வசூலிப்பதை விட குறைவாக வசூலிக்கப்படுகிறது. டி. வி. எஸ். கம்பெனி. சிம்ஸன் கம்பெனி, அதைச் சார்ந்த பல குரூப் கம்பெனிகள், பல செல்வந்தர்களின் வீடுகளுக்கும் சர்க்காரைவிட ஏன் குறைவாக வசூலிக்கப்படுகிறது? இவர்களெல்லாம் காங்கிரசின் எசமானர்கள். அதனால்தான் அவர்களுக்குச் சலுகைக் காட்டப்படுகிறது.

இம்மாதிரி பல கொடுமைகளை கடந்த 15 ஆண்டுகளாகச் செய்துவந்திருக்கிறார்கள். இதையெல்லாம் கண்டு பிடித்துள்ள எங்களை நகரசபையில் என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்கள்? இம்மாதிரியான அக்கிரமங்களை, கொடுமைகளை—தவறுகளைக் கண்டு பிடிக்க 2 அசசர்களை ஸ்பெஷலாக நியமித்துள்ளோம். அவர்களுக்கு ஒரு ஜீப் காரும் கொடுத்து, அதிகாரமும் கொடுத்து 1000 ரூபாய்க்கு மேலும், மற்றும் அதிகமான வாடகைகள் வரும் வீடுகட்கும் குறைவான வரிவிதிக்கப்பட்ட வீடுகளையும் கண்டு பிடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கட்கு "ஸ்பெசல்கு வார்ட்ஸ்" என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வந்தேன். கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சார்ந்த நண்பர் கோபால் வழிமொழிந்தார் அப்பொழுது காங்கிரசார் மறுக்கவில்லை ஆனல் வெளியில் வந்து நம்மை தூற்றியும் பழித்தும் பேசுகிறார்கள், இந்த ஸ்பெஷல் அசசாகளை ஏன் நியமித்திருக்கிறோம் என்பதை பாருங்கள் மவுண்ட் ரோட்டில் இந்துப் பத்திரிகைக்குச் சொந்தமான கட்டிடம் இருக்கிறது. அதே போன்று மெயில் பத்திரிகைக்கும் சொந்தமான கட்டிடம் ஒன்றும் இருக்கிறது.

ஹிந்துப் பத்திரிகைக்கு அதிக மதிப்புப் போட்டு அதிக வரி போட்டு, மெயில் பத்திரிகைக் கட்டிடத்திற்குக் குறைந்த மதிப்புப் போட்டு குறைந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஏன் என்றால் மெயில் பத்திரிகை சிம்சன் குரூப் கம்பெனியைச் சேர்ந்த அனந்தராமகிருஷ்ணனைத் திருப்திப்படுத்த, அதே போன்று மவுண்ட் ரோட்டிலுள்ள அஞ்சுமன் கட்டிடத்திற்குப்பக்கத்லுள்ள பெரிய, பெரிய கட்டிடங்களுக்கு வரிகளைக் குறைத்துப்போடப்பட்டிக்கிறது இவைகளைக் கவனிப்பதற்காகவும், வரிகளை ஏமாற்றுகிறவர்களைக் கண்டு பிடிப்பதற்காகவே ஸ்பெசல்அசசர்களைநியமித்திருக்கிறோம். கட்டிட வரிகளின் வாயிலாக லட்சக் கணக்காக வருவதை பணக்காரர்கள் ஏமாற்ற நமக்கு முன்பிருந்தவர்கள் வழிவகை செய்திருக்கிறார்கள்.

இவர்கள் ஆட்சியில் நடந்த இன்னொரு அநியாயத்தைப் பாருங்கள். நீங்கள் அண்ணாமலை மன்றத்தையும் பார்த்திருக்கிறீர்கள் கோக்கலே மண்டபத்தையும் பார்த்திருக்கிறீர்கள். கோகலே மண்டபத்திற்கு காலை நிகழ்ச்சிக்கென்றால் தினம் வாடகை 45 ரூபாய் மாலைக் நிகழ்ச்சிக்கு 75 ரூபாய் அண்ணாமலை மன்றத்திற்கு தின வாடகை 300 ரூபாய்! ஆனல் நகர மன்றம் அண்ணாமலை மன்றத்திற்கு வரி 600 ரூபாயும். கோகலே மண்டபத்திற்கு 1300 வரி ரூபாயும் விதித்திருந்தார்கள் ஏன் இப்படிச் செய்தார்கள்? காங்கிரஸ் காரர்களின் எஜமானரான செட்டி நாட்டரசரைத் திருப்திப்படுத்த—அவரின் தயவைச் சம்பாதிக்க! ஆனல் நாம் அண்ணாமலை மன்றத்திற்கு 6 மாதத்திற்கு 2000 ரூபாய் உயர்த்தியிருக்கிறோம். அவர்கள் 1 வருடத்திற்கு 600 ரூபாய் போட்டிருந்தார்கள் இது நகர மன்றத்திற்கு எவ்வளவு நஷ்டம் வந்திருக்கிறது என்பதைச் சிந்தியுங்கள். என்ன செய்து விட்டீர்களென்றால் இதெல்லாம் செய்து விட்டோமே! இந்த வயிற்றெரிச்சலால் எங்களை கண்டபடி தாக்குகிறார்கள். தொழில் வரியை எடுத்து விட்டதாகக் கூறுகிறீர்களே இன்னும் வாங்கிக் கொண்டிருக்கிறீர்களே என்று ஒரு நண்பர் கேட்டிருக்கிறார். நாங்கள் தொழில் வரியை ரத்து செய்து தீர்மானித்து சர்க்காருடைய அனுமதிக்கு அனுப்பியுள்ளோம். ஆனல் இதுவரை அவர்களிடமிருந்து அனுமதியில்லை. நாங்கள் என்ன செய்வோம் நகர மன்றத்தில் அமுலில் இருப்பதை ரத்து செய்வதென்றால் சர்க்காருடைய அனுமதிபெற வேண்டும். வரியைக் குறைக்கவோ, மாற்றவோ வேண்டுமானல் யாருடைய அனுமதியும் தேவையில்லை நகர மன்றமே செய்யலாம். அதற்கு சட்டப்படி சர்க்கார் அனுமதி தேவை. அதன்படி தான் கேட்டிருக்கிறோம். அதுவும் தக்க காரணங்களைக் காட்டி, அதனால் வரும் இடையூறுகளையும் நஷ்டங்களையும் காட்டி எங்களுக்கு இந்த தொல்லை தரும் வரி வேண்டாம் என்று தீர்மானித்து சர்க்காருக்கு அனுப்பியுள்ளோம்.

இந்த வரி வசூலிப்பதில் தொல்லைகள் மட்டுமல்ல. வரி வசூலிக்கப்படாமல் போய் வருடக் கடைசியில் நகர சபைக்கூட்டத்தில் தள்ளுபடி செய்ததாகவும் தீர்மானிக்கிறோம். இந்த வரி வசூலிக்க நகர சபைக்கு ஏற்படும் செலவைப் பாருங்கள் ஒரு நபரிடம் 2 ரூபாய் வசூலிக்க முதலில் டிமாண்டு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். அது சரியாக சர்வ் செய்ய முடிவதில்லை. நபரையே கண்டு பிடிக்க முடிவதில்லை. உதாரணமாக பி, என். சி. மில்லில் போய் தொழில் வரி வசூலிக்க டிமாண்டு நோட்டீஸ் கொண்டு போனல் அதை சர்வ் செய்ய உள்ளே போக முடியாது. கேட்டுவாசலில் வாயில் காப்போன் விடுவதில்லை கேட்டில் நின்று கொண்டு தொழிலாளிகள் வரும் போது கந்தசாமியார், முனுசாமி யார் என்று விசாரித்தால் அந்த முனுசாமி கந்தசாமியே அவர்கள் இல்லை. அந்தப் பக்கம் போய் விட்டார் என்று கூறுவார்கள். டிமாண்டு நோட்டிஸ் சர்வ் செய்ய முடியவில்லை என்றால் 10 அணு செலவு செய்து ரிஜிஸ்டர் நோட்டீஸ் அனுப்ப வேண்டும் அதுவும் அவர்கள் கைக்குப் போய் சேர்வதில்லை பின் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குப் போட வேண்டும். வக்கீல் செலவு, கோர்ட்டு செலவு என்று 15 ரூ. செலவு செய்ய வேண்டும். 2 ரூபாய் வசூலிக்க இவ்வளவு செலவு செய்தாக வேண்டும் இரண்டு லட்சம் ரூபாய் வசூலிக்க வேண்டுமானல் 1 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும். இது எதற்கு நமக்கு. அப்படிச் செலவு செய்தாலும் வசூலிக்க முடிகிறதா? முடிவதில்லை. ஒரு லட்சம் ரூபாய் வசூலிக்க முடியவில்லை என்று தள்ளுபடி "ரைட் டாப்" செய்திருக்கிறோம் இந்தக் காரணங்களையெல்லாம் காட்டி, நீண்ட வாதங்கள் செய்து மற்ற கட்சி தலைவர்களையும் கலந்து இந்த வரியை நீக்க வேண்டும் என்று தீர்மானித்து அனுப்பினல், சர்க்காரிடமிருந்து இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

இந்தத் தீர்மானத்தைத் 1—10—59ல் முடிவு செய்து அனுப்பினோம். இன்னும் அனுமதியில்லை. ஏன் இந்த நிலை? ஒரு நகர சபை செய்த முடிவை நீ செய்தது—சரி இல்லை என்று சொல்வதற்கு ஏன் இந்தத் தாமதம். இது தான் ஜனநாயக சர்க்கார்-மக்கள் சர்க்கார் செய்வதா? எங்கள் தீர்மானக் கடிதம் இன்னும் காரியதரிசி மேஜை மீதிருக்கிறது. இப்படி இருக்கும் போது எங்களை தொழில் வரி நீக்குவதாகக் கூறினீர்களே, ஏன் நீக்கவில்லைஎன்று கேட்கிறார்கள்: அது எங்களைக் கேட்பதை விட, சர்க்காரைக் கேளுங்கள். காமராசரைக் கேளுங்கள். இதற்கு மேல் நாங்கள் என்ன செய்ய முடியும்! மற்றும் எங்களை இன்னும் சிலர் கேட்கிறார்கள் வந்து கடனாக இருந்த நகர மன்றத்தில், கடன் கட்டியிருக்கிறீர்களே அதை எந்த பாங்கியில் போட்டிருக்கிறீர்கள் என்று கேட்கிறாகள், நகர மன்றத்தில் சீப் அக்கவுண்டெண்ட், உதவி அக்கவுண்டெண்ட் என்ற அதிகாரிகளும், கணக்கர்களும் இருக்கிறார்கள் அவர்களைக்கேளுங்கள் நாங்கள் வந்த பின் என்ன செய்திருக்கிறோம் என்று.

நாங்கள் பதவி ஏற்பதற்கு முன் வரவு செலவுத் திட்டத்தை நமக்கு முன் பதவியிலிருந்த காங்கிரசார் தயாரித்து விட்டுச் சென்றார்கள். அந்த திட்டத்தின் படிதான் நாங்கள் நிர்வாகம் செய்யமுடியும் இதை மாற்றவோ, திருத்தவோ முடியாது. 14 லட்சம் துண்டுவிழும் படியும் 21 லட்சம் ஓவர் டிராப்ட்டாகவும் செய்து விட்டுச் சென்றார்கள். ஆனல் நாங்கள் அதையெல்லாம் ஒருவாறு சரிசெய்து அந்த எல்லைக்குள் என்னென்ன செய்ய முடியுமோ அதைச் செய்திருக்கிறோம். ஏழை மக்களுக்கு அதைக் கொண்டு எங்கெந்த நன்மை செய்ய முடியுமோ அதைச் செய்துள்ளோம்.

(12ம் பக்கம் பார்க்க)

பிறப்பு

'கலைப்பூங்கா' துணை ஆசிரியர் தோழர் தன. நடராசன் அவர்களின் துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மையாருக்கு காவேரிப்பட்டணத்தில் 4-12-59 அன்று இரவு 4-30 அளவில் ஓர் ஆண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம்.

தொழிற் சங்கங்களில் அரசியல் கருத்தை புகுத்த மாட்டோம்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

(நெடுஞ்செழியன் பேச்சு)

நான் இவர் எழுதியிருக்கின்றபடி நான் எப்பொழுதும் பேசியது கிடையாது. அதுவும் அவர் கூறும் 22—9—59ல் அவ்வாறு பேசியதே இல்லை. பொய்யாக, தவறாக எழுதியிருக்கிறார். அவர் எழுதியிருப்பது உண்மையல்ல. மற்றும் அவர் எழுதியிருப்பதில் கண்ணியமோ, நாணயமோ, நேர்மையோ, தெளிவோ நாகரீகமோ சிறிதுமின்றி மட்டரகமாக, கேவலமாக எழுதியிருக்கிறார்,

அவர் எழுதிய சீட்டில் கையெழுத்துப் போட்டு அனுப்பியிருக்கிறார். ஆனால் அவர் பெயர் இந்த மாபெரும் கூட்டத்தில் கூறி விளம்பரம் செய்ய நான் விரும்பவில்லை.

நண்பர் பழனிச்சாமி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அவர் ஒழுங்காக இருக்கும் சங்கத்தைப் பிளந்து காங்கிரஸ் சர்க்காருக்கு ஐந்தாம் படை வேலை செய்கிறார் என்ற பொருள் பட எழுதுகிறார்.

நண்பர் பழனிச்சாமியா காங்கிரஸ் கட்சிக்கு ஐந்தாம் படை செய்து தொழிலாளர்களுக்கு துரோகம்செய்வார்? இதுதொழிலாளர் கட்குத் தெரியாதா?

இப்படி எழுதியது அவரது அறிவீனத்தையும், இழிந்த மனப்பான்மையையும் மட்டமான—தாழ்ந்த செய்கையையும் தான் காட்டுகிறது!

ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளக் கூடாது, பண்பற்ற முறையில் நடந்து கொள்ளக் கூடாதென்று எண்ணியிருக்கும் எனது எண்ணத்திற்கு மாறுபட்டு மோசமான நிலைக்குக் கொண்டு போக எண்ணுகின்றனர்.

இதற்குச் சான்றாக சங்க கால ஒரு பாடலில் கூறுவது போன்று காட்டில் ஒருபுலி தூங்கிக்கொண்டிருந்ததாம் அதை ஒரு குருடன் தனது காலால் இடறினானாம் அதுபோன்று இருக்கிறது. சீட்டுக் கொடுத்த நண்பரின் செயல்.

நான் 22—9—59-ல் அவர் குறிப்பிட்டபடி பேசவே இல்லை, அப்படி பேச வேண்டிய சந்தர்ப்பமும் அன்று வரவில்லை. அப்படி இருந்தும், நம்மை அவர்கள் பேச வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். நான் அவர் குறிப்பிடும் தேதியில் பொறுப்பேற்ற பின்தானே கூட்டத்திற்கு வந்து பேசியிருக்கிறேன். அப்படியிருக்கையில் எவ்வாறு இவர் கூறுவது போன்று பேசியிருப்பேன். இது தெளிவற்றதும், ஆதாரமற்றதுமாகும்.

ஒழுங்காகவும், ஒற்றுமையாகவும் இருந்த சங்கத்தை உடைத்து, பிளவுபடுத்தி, ஒருமனப்பட்டு ஒற்றுமையாக இருந்தவர்களைப் பிரித்து அதிலிருந்து போட்டி சங்கம் ஏற்படுத்தி தலைவனாகி விட்டேனா? இந்த மாதிரி சங்கங்களை ஏற்படுத்தி தலைவனாக வேண்டுமென்று ஒவ்வொரு சங்கமாக அலைந்து சுற்றி வந்தேனா? எனக்கு வேறு வேலையின்றி இம்மாதிரி சங்கங்களில் தலைவனாக இருந்துதான் வர வேண்டுமென்ற நிலையில்தான் இருக்கின்றேனா? என்று. ஒன்றுபட்டும், ஒற்றுமையாகவும், ஒருமனப்பட்டும் ஒரே சங்கத்தில் இருந்தீர்கள்? அதைப் பிரித்து விட்டேன். ஒன்றுபட்டும், ஒற்றுமையாகவும் இருக்கச் செய்திருந்தால் ஏன் இந்த சங்கம் ஏற்படுகிறது? ஒற்றுமை இழந்து, பல பிரிவாக இருந்தவர்களை ஒன்றுபடுத்தி சங்கம் ஏற்படுத்தி நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாத குறைகளை தீர்க்க வழி செய்யப்படுகிறது. இது செய்வது போட்டி சங்கமா? இப்போதும் கூறுகிறேன்: நீங்கள் ஒன்றுபட்டும், ஒருமனப்பட்டும் சிதறிக் கிடப்போரை ஒன்று சேர்த்து வையுங்கள்! ஒற்றுமைப் படுத்துங்கள், நான் இதிலிருந்து விலகுகிறேன். எனது நண்பர்கள் சாமுவேல், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரையும் விலகச் செய்கிறேன். இந்த சங்கத்தில் நான் தலைவனாகப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று நமது நண்பர்கள் பலமுறை வந்து கேட்டார்கள். அதுபோது நான் கூறினேன். எனக்கு பல வேலைத் தொந்தரவுகள் இருக்கிறதென்றும் அலைச்சலும், பல பொறுப்புக்களும், அரசியல் பணிகளும் ஏராளமாக இருப்பதால், நான் தலைவனாக இருக்க முடியாதென்றும் என்னை விட்டு விடுங்கள். வேறு யாரையாவது போடுங்கள், நான் என் ஆதரவு தாராளமாகக் கொடுக்கிறேன், ஆலோசனைகளைக் கூறுகிறேன். போராட்டம் என்றால் அழைப்புக் கிடைத்ததும் உடனே வருகிறேன். என் ஒத்துழைப்பு என்றும் தருகிறேன். நான் ஊர் ஊராகச் சுற்றுபவன். எனக்கு நேரமே இல்லை. சமயம் நேரும் போதெல்லாம் உங்களோடிருக்கிறேன் என்று கூறி அவர்கள் வேண்டுகோளை மறுத்தேன்.

நண்பர்கள் நான் சொன்னதைக் கேட்கவில்லை. அவர்கள் பிடிவாதமாக நான் தலைவனாக இருக்க வேண்டுமென்றும் அன்றாட வேலைகளைத் தாங்கள் பார்த்துக் கொள்வதாகவும், எங்களுக்கு யோசனைகளையும், கருத்துக்களையும் கூறினால் போதுமென்றும் குறைபாடுகளை நீக்க அதிகாரிகளைப்பார்க்கும்போதும் அதற்கான திட்டங்கள் தீட்டும் போதும் உடனிருங்கள். மற்றவைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று வற்புறுத்தினார்கள். அவர்கள் வேண்டுகோளை மறுக்க முடியாது ஏற்றேன். இது கருங்காலித்தனமா? நீங்கள் யோசித்துப் பாருங்கள்.

ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் இந்தத் தொழிலாளர்கள் 5000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை கடந்த 4 ஆண்டுகளாக ஒன்றுபடுத்த முடியாதவர்கள், அதில் ஈடுபடாதவர்கள் நம்மை கேள்வி கேட்கிறார்கள்!

நான் தொழிற் சங்கங்களில் தலைவனாக இருக்க வேண்டுமென்ற ஆவலால் தலைவனைப் பிடித்து, நீ தலைவனா? நான் தலைவனா என்ற தலைவர் போட்டிகளில் ஈடுபடுபவனல்ல. அதற்காக சைனா பஜாரிலிருந்து ராட்டன் பஜார் வழியாக ஊர்வலமாக வந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்குள் புகுந்து ஒற்றுமையாக இருந்தவர்களைப் பிரித்து, என்னைத் தலைவனாக்குங்கள், மாலை போடுங்கள் என்று வேண்டவில்லை. ஆகவே, பண்பாடற்று, முறையற்று இழிவாக கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம்.

நமது சங்கம் ஆற்ற வேண்டிய காரியங்களையும், ஆற்றிய பணிகளையும், நமது குறைபாடுகளையும், சம்பள வித்தியாசங்களையும், தொழிலாளர்களுடைய இன்னல்களையும், நண்பர்கள் விளக்கினார்கள்.

இந்த சம்பள விகிதத்தில் வித்தியாசங்கள் காட்டி, தொழிலாளர்களுக்குள்ளேயே பிளவாக்கி ஒற்றுமையைக் குலைத்து வருகிறார்கள். நமது நகரத்தில் சர்க்கார் அலுவலகங்களில் பணியாற்றுபவர்களில் மத்திய சர்க்கார் ஊழியர்களென்றும், மாநில சர்க்கார் ஊழியர்களென்றும் பிரித்து அவர்களுக்குள்ளேயே சம்பளங்களில் வித்தியாசங்கள் காண்பித்து வைக்கிறார்கள். ஏன் இந்த பேதம்? இதில்தான் ஒருவருக்குள்ள பிரிவு எண்ணங்களும், வேற்றுமை போக்குகளும் நிலவுகின்றன.

ஒரு வீட்டில் அண்ணனும், தம்பியுமிருக்கிறார்கள். அவர்களிருவரும் பி. ஏ. படித்திருக்கிறார்கள். அண்ணன் மத்திய சர்க்காரில் பணி புரிகிறான், அவன் 125 ரூபாய் சம்பளம் பெறுகிறான். தம்பியும் பி ஏ. படித்தவன், மாநில சர்க்காரில் பணி புரிகிறான். அவன் 85 ரூபாய் சம்பளம் பெறுகிறான். ஒரே படிப்பு படித்த இவர்களுக்கு, ஒரே ஊரில் பணி புரியும் இவர்களுக்குள்—ஒரே படிப்பு படித்து பட்டம் பெற்றவர்களுக்குள் ஏன் இந்த பேதம்?

நமது நாட்டில் உணவு விலைகள் ஏறிக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தி வாங்குகிறவர்களின் நலத்தைப் பாதுகாக்க சர்க்கார் முயற்சிக்கவில்லை.

85 ரூபாய் மாத சம்பளம் பெறுகின்றவனும், 125 ரூபாய் மாத சம்பளம் பெறுகின்றவனும் ஒரே கடையில், ஒரே விலையில்தான் சாமான்கள் வாங்குகிறார்கள். அப்படி இருக்கும் போது அவர்கள் எண்ணங்கள் எப்படி இருக்கும், அது போலவே நமது தொழிலாளர்கட்கும் ஒரே வேலை செய்கின்றவர்களில் ஆஸ்பத்திரிக்கு ஆஸ்பத்திரி சம்பள வித்தியாசங்கள் இருந்து வருகின்றன. அதுவும் ஒரே சர்க்கார் நிர்வாகத்தில்! ஒரு நாட்டில் நல்ல வசதியுடன் மக்கள் வாழ வேண்டுமானால் அந்த நாட்டு சர்க்கார் நல்ல முறையில் ஆட்சி புரிய வேண்டும், மக்கள் வாழ்க்கையில் நல்ல முறையில்வாழ வசதிகள் செய்து தர வேண்டும். மக்களுக்கு வசதி இருக்கின்ற வகையில் வாங்குகின்ற பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி வசதிகள் செய்து தர வேண்டும். அப்படிச் செய்தால்தான் அது நல்லாட்சியாகும்.

ஆனால் நமது மாநில அமைச்சர்களிடம் விலைவாசிகள் ஏறுகிறது என்றால், அவர்களும் ஆமாம் விலைவாசிகள் ஏறுகிறது என்று கூறி நம்மோடு சேர்ந்து தலை ஆட்டுகிறார்கள். ஆனால் விலை ஏற்றத்தைத் தடுக்க வழி செய்யவில்லை.

அவர்களிடம் சட்டமிருக்கிறது, அதிகாரமிருக்கிறது. அப்படி இருந்தும் அவர்களால் ஒன்றும் செய்யாதிருக்கிறார்கள். வாங்குகின்ற பொருள்கள் கணிசமான முறையில் விற்க வேண்டும். அப்படியானால்தான் வாங்குகின்றவர்களுக்கு வசதியாக இருக்கும்.

நமது தொழிலாளர்களுக்கும் இம் மாதிரியான தொல்லைகள் இருந்து வருகிறது. இவர்கள் செய்யும் வேலைகள் மிகவும் அத்யாவசியமான வேலைகள் பலருடைய உயிர்களை இவர்க்ள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பொறுப்பும், அன்றாடம் செய்து முடிக்க வேண்டிய கடமையுமிருந்து வருகிறது.

சர்க்கார் அலுவலகத்தில் பணி புரியும் அலுவலங்கள் தங்கள் பணிகளை சிறிது தாமதித்து, வீட்டிற்குக் கொண்டு வந்தும், கேம்ப் போகுமிடங்கட்குக் கொண்டு போய் செய்யலாம். அதாவது, பைல்கள்—கடிதங்கள் தான் பார்க்கிறார்கள் எழுதுகிறார்கள். ஆனால் அலுவலர்களுக்கு வேலையில்லை யென்றோ, அவர்கள் பணி சாதாரணமானதென்றோ கூறவில்லை,

நமது அமைச்சர்கள் கூட தங்கள் பைல்களை சட்ட மன்றங்கட்குக் கொண்டு வந்து, எதிர் கட்சியினர் மக்கள் குறைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது பைல்களைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

சட்டசபை-வெறுந்தட்டு!

கார்ப்பரேஷன்-தையல் இலை!!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

(அண்ணு பேச்சு)

மல்லிகை வளர்ந்து அதன் மணத்தை அனுபவிக்க முடியும். மாற்றாரின் பேச்சு மண்ணைப் போன்றது! அவர்கள் மண்ணை வீசினார்கள் என்பதற்காக, நீங்களும் எதிர்த்து மண்ணை வீசினல் யார் மல்லிகைச் செடியை நடுவது?

குழந்தை அழுகிறது என்பதற்காக தாயும் சேர்ந்து அழுதால் என்ன ஆகும்? நல்ல தாயாக இருந்தால் அழுகின்ற குழந்தையை மார்போடு சேர்த்தணைத்து, அழுதவாய்க்கு முத்தமிட்டு அழுகையை நிறுத்துவாள் அதை விட்டு 'சனியன் இப்படித்தான் அழும்' என்ருல் பெற்றது யார்? பிறந்தது ஏப்படி என்று அடுத்த தெருவிலே இருப்பவர்கள் வரை திட்டுவார்கள்!

இதுவரை திட்டுவதாலே கெட்டவர்கள் இல்லை! வெயிலால் மரம் பட்டுபோகுமா?

மாற்ருர் திட்டிக் கொண்டிருக்கிருர்கள், நாமும் திட்டுவோம் என்று திட்டிக்கொண்டே இருந்து நாம் நமது பணியை செய்யாமல் இருந்தால் நம் கட்சி கெட்டு விடும்!

நாம் இங்கே பேசிக் கொண்டிருப்பதை போல் நமது கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் இதே நேரத்தில் பல இடங்களில் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.

நம்காரியம் கொஞ்சமும்குறையாமல் நடைபெற்று வருகிறது! மாற்றுக் கட்சியானர் திட்டுகின்ற வேகம் வளருவது போல் நம் கழகமும் வளரும்!

காங்கிரஸ் மந்திரிகள் நம் கூட்டத்திற்கு வருகிருர்கள். எப்படி? நான் பேசுவதை இவர்கள் எழுதுகிருர்கள். மந்திரிகள் என்னென்ன பேசினேம் என்பதை படிக்கிருர்கள், நேற்று இங்கு கூட்டம் நடைபெற்றது! இதற்கு பதில் சொல்லுவதா? கோடம்பாக்கத்தில் நடக்கின்ற கூட்டத்திற்கு பதில் சொல்லுவதா? நாம் பேசுவது போலவே கம்யூனிஸ்டும் கூட்டம் போட்டு பேசுகிருர்கள். சோஷலிஸ்டுகளும் கூட்டம் போட்டு பேசுகிருர்கள். சில வேலைகளில் தமிழரசு கழகத்தாரும் கூட்டம் போட்டு பேசுகிருர்கள். எதற்கு பதில் சொல்லுவது?

கல்யாண வீட்டில் உள்ள பெரிய மனிதர் கெட்டி மேளம் கொட்டு—பன்னீர் சொம்பு எங்கே?—சாப்பாடு ஆகி விட்டதா? அதை பார்த்தாயா—இதை கவனித்தாயா என்றுகேட்பது போல் காமராஜர் 'அது கிடக்குது சுதந்திரா கட்சி, தி.மு.க. ஒரு கட்சியா' என்று பேசுகிருர்!

அவர்கள் திட்டுவதாலே நாம் கெடவில்லை!

சுதந்திரம் கிடைத்த பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆச்சாரியார் ஆரம்பித்திருக்கும் புதிய கட்சிக்கு சுதந்திரா கட்சி என்று பெயர் வைத்திருக்கிருர். என்ன அர்த்தம்? பன்னிரெண்டு ஆண்டுகளில் சுதந்திரம் கிடைக்கவில்லை என்று பொருள்!

வீட்டில் தேள் இருப்பதைக் கண்ட மனைவி தன்கணவனிடம் தேளை அடியுங்கள் என்று கூறினல், கணவன் தன் மனைவியைப் பார்த்து ஆம்பளை இருந்தால் கூப்பிடு என்று சொன்னல் என்ன அர்த்தம்? ஆண் உருவத்தில் கணவன்—ஆனல் ஆண் அல்ல!

சுதந்திரா கட்சி தோன்றியதாலே காங்கிரசுக்கு எதிர்ப்பு வளருகிறது!

சென்னை சட்டமன்றத்தில் நான் பேசுகிற போது கூறினேன் 'ரூபாய்க்கு பன்னிரண்டு படி அரிசி போடாவிட்டாலும், பன்னிரெண்டணுவுக்கு ஒரு படி அரிசி போடுங்கள்' என்று. அதற்கு அமைச்சர் பக்தவச்சலம் கூறினர் 'நீங்கள் சொல்லுவதுபோல் போடலாம். விவசாயிக்கு நஷ்டமேற்படும் என்ருர். நஷ்டமென்ருல் விவசாயிக்கு ஈடு கொடுக்கலாம் என்று பதிலுக்கு கேட்டேன். அவர் கொடுக்க முடியாது என்றுகூறிவிட்டு 'நீங்கள் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்து விட்டது' என்ருர், 'அதற்குத்தானே நான் இருக்கிறேன்' என்று நான் சொன்னேன்.

விவசாயிக்குத்தான் நஷ்டமேற்படுமே தவிர இருக்கிற எட்டுமந்திரிகள் சம்பளத்தில் ஒரு துளியும் குறையாது! சட்ட மன்றத்திலே உள்ள அர்த்த நாரீஸ்வர கவுடர் என்னும் உறுப்பினர் ஒருவர் நிலத்துக்கு உச்ச வரம்பு கட்டவேண்டுமென்று சொல்லுவது போல் வருமானத்திற்கும் உச்சவரம்பு கட்டலாம். மந்திரிகள் சம்பளத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டும். மற்ற மந்திரிகளுக்கு பரவாயில்லை, காமராசருக்கு ஆயிரம் ரூபாய் ஏன்—அவர் குறைத்துக்கொள்ளவேண்டும். என்ருர் இப்படிக் கேட்பவர் கருணாநிதியோ, அன்பழகனே அல்ல! கேட்டவர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்.

கூட்டுப் பண்ணையினல் உற்பத்திபெருகும் பெருகும் என்று கூறுகிருர்களே தவிர, இதுபற்றி காங்கிரஸ் அமைச்சர்கள் தெளிவாகச் சொல்லவில்லை.

பெண்ணைக் காட்டாமலேயே கல்யாணம் செய்துகொள் என்று கட்டாயப் படுத்துவது போல் கூட்டுப்பண்ணை முறையை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா என்று கேட்கிருர்கள்.

இப்போது ரூபாய்க்கு உள்ள மதிப்பு குறைந்து விட்டது. நூறு ரூபாய்க்கு இருபது பங்கு தேய்ந்து விட்டது! தேர்தல் காலத்தில் நாம் நோட்டீஸ் அடித்தபோது காங்கிரஸ்காரர்கள் கேலி புரிந்தனர் 'பார் பார்! நாட்டு மக்கள் வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதுமா? என்று சொல்கிருர்கள், என்ருர்கள். நோட்டை அடித்து குவித்ததாலே இப்போது ரூபாயின் மதிப்பு கால் பங்கு குறைந்து விட்டது!

பத்து, ஐந்து வருடத்திற்கு முன்பு இருந்த மதிப்புபோல் இப்போது இல்லை!

நன்றாகத்தான் இருந்தான்! 270 பவுண்ட் எடை இருந்தது. 200 பவுண்டுதான் இப்போது இருக்கிருன் என்ருல் என்ன அர்த்தம்! ஆளாக இருக்கிருனே தவிர உள்ளுக்குள் நோய் இருக்கிறது என்று பொருள்! நமது ரூபாயின் மதிப்பு தேய்ந்து விட்டது என்ருல் நமது ரூபாய்க்குள் காங்கிரஸ் என்னும் டி. பி. நுழைந்து 100க்கு 20 தேய்ந்து விட்டது என்றுதானே அர்த்தம்?

மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான உணவு—உடை—இடம் ஆகியவைகள் லாப வேட்டைக்காரர்களின் கையிலே இருக்கக் கூடாது.

சர்க்கார் தபால், கார்டு, கவர்களை தயாரிப்பதுபோலவே—மனித தேவைகளுக்கான இடம், உடை, உணவு ஆகியவைகளை அளிக்கும் பொறுப்பை சர்க்காரே ஏற்றுக் கொள்ள வேண்டும்!

தனிப்பட்டவரிடத்திலே கார்டு அச்சடிக்கும் உரிமை இருந்தால் கல்யாண சீசன் என்பதற்காக தை மாதத்தில் கார்டு விலை நாலணுவாக இருக்கும். வேறு மாதத்தில் முக்காலணு—அரையணுவாக விலை இருக்கும். மக்களுக்கு உணவு போடுகின்ற பொறுப்பை சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும்!

இந்த நாட்டிலே இருக்கிற மூன்று கோடி மக்களுக்கு வயிருர உணவு அளிக்கவில்லை—இந்த சர்க்கார்.

உணவு—உடையின் விலைகளைக் கட்டுப் படுத்துங்கள்! கிராமபோன், ரேடியோ, மோட்டார்போன்றவைகளுக்கு என்ன விலை வேண்டுமானலும் அதிகமாக்குங்கள். மனித அடிப்படை பொருள்களுக்கு சர்க்கார் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும்!

போன வருடம் நூறு ரூபாய் சம்பளம் வாங்கியவன் இப்போது 125 ரூபாய் வாங்குவதாக இருந்தாலும் அதே அளவில்தான் இப்போதும் வாங்க முடிகிறது!

மத்திய சர்க்காரில் சம்பத்தும், தர்மலிங்கமும் இரண்டு பேர்மட்டுமே இருககிருர்கள். எதிரே நானூற்று சொச்சம் பேர் இருக்கிருர்கள். அவர்கள் மத்தியிலே பேச வேண்டுமென்ருல்கூட தைரியம் வருவதே அதிசயம்! இங்கே பதினைந்து பேர் இருக்கிரேம்! யார் பக்கம் நியாயம் இருந்தாலும் வலிவு அவர்களுக்கு இருக்கிறது! இந்த குறை நீங்க வேண்டுமானல் சட்ட மன்றத்திலே நமது எண்ணிக்கை அதிகமாக வேண்டும்.

அங்கே, குறைகளை எடுத்துச் சொல்லுகின்ற வலிவு நமக்கு அதிகமாக வேண்டும். அதற்கு நீங்கள் தேர்தலிலே ஆதரித்து நம்மவர்களை அதிகமாக அங்கே உட்கார வைக்க வேண்டும்!

முன்பெல்லாம் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் திட்டமில்லை—திட்டமில்லை என்று பேசி வந்தார்கள், இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் நாட்டைப் பிரிக்கச் சொல்லுகிருர்கள் என்று கூறி வருகிருர்கள்!

'திராவிட நாடா, கொடுத்தால் ஒரு நாள் ஆளுவாயா' என்று கேட்கிருர்கள்.

சிவஞானம், அவர்களையும் ஒரு படிதாண்டி 'காங்கிரஸ்காரர்கள் கொடுத்தாலும் நான் விடமாட்டேன்' என்று கூறுகிருர்.

நாடு எப்போது பிரியும் என்று கேட்கிருர்கள், இதைக் கேட்கின்ற மக்கள் தொகை வளர்ந்தால், நாடு பிரியவேண்டுமென்ற மன வலிவு—உறுதி உங்களுக்கு எப்போது வருகிறதோ அப்போதுதான் பிரியும். பிரிக்க முடியுமா—முடியாதா என்பது நீங்கள் அளிக்கின்ற வலிவிலே இருக்கிறது!

இப்போது காங்கிரஸ்காரர்கள் 'திராவிட நாடு வேண்டும்—வேண்டும் என்று கேட்கிறீர்களே, திராவிட நாட்டின் எல்லை என்ன என்று கேட்கிருர்கள்.

இன்ன கலரில் புடவை எடுக்க வேண்டுமென்று தீர்மானித்த பின்பு, இந்தக் கலரில் வேண்டும் என்று கடைக்காரனை கேட்க வேண்டும், அதைவிட்டு பச்சை, சிகப்பு, நீலம் இந்தக் கலரில் உள்ள புடவை எடுத்துப்போடுங்கள் பார்க்கலாம் என்று கேட்டால் என்ன அர்த்தம்?

பிரிவினையை ஒப்புக் கொண்டால், பிறகு படித்தவர்களை அழைத்து எல்லையை பிரிக்கச் சொல்லலாம்!

பிரிவினை தத்துவத்தை ஒப்புக் கொண்டால், எல்லையைப் பற்றி பிறகு பேசலாம். என்னைப் பொறுத்த வரையில் பத்துமைல் குறையட்டும் பரவாயில்லை!

காமராஜர் இன்னென்றும் கேட்கின்ருர். ஆந்திராக்காரனையும், கன்னடத்துக்காரனையும், கேரளத்துக்காரனையும் திராவிட நாட்டு பிரிவினையின் போது சேர்த்துக் கொள்கிறீர்களே! பம்பாய்க்காரனையும், பஞ்சாப்காரனையும், வங்காளத்துக்காரனையும் சேர்த்துக் கொண்டால் என்ன என்று!

இதற்கு சாதாரணமாகவே பதில் சொல்லலாம்,

இலையில் சாப்பாடு போட்டு கூட்டு, பொறியல், பல பண்டங்களை பரிமாறிவிட்டு, சாப்பிடு கிறவனைப் பார்த்து—

கூட்டு வைத்தேன்—சாப்பிட்டாய். பொறியல் வைத்தேன்—சாப்பிட்டாய். இலை என்ன பாவம் பண்ணிற்று அதையும் தின்னேன்! என்ருல் என்னசொல்வது?

இப்படிக் கூறுவதால் அவர்களைக் கெட்டவர்கள் என்று சொல்லவில்லை. நமக்கும் அவர்களுக்கும் இனவழியிலேயும், கருத்து வழியிலேயும் கூட்டு மனப்பான்மை கிடையாது!

சென்ற தேர்தலில் பதினேழு லட்சம் வாக்குகள் பெற்ரேம்! இன்று நமது கொள்கையை புரிந்து கொணடவர்கள் முப்பது லட்சம்பேராக இருக்கிருர்கள். இப்போது இருக்கிற முப்பதுலட்சம் அடுத்த தேர்தலில் ஐம்பது லட்சமாக வளர வேண்டும்,

பொதுமக்கள் நாங்கள் கூறி வருகின்ற நாட்டுப் பிரிவினைக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

இருபதாண்டுகள் வேலை செய்தும் நிரந்தரமாக்காதிருப்பது அநியாயம்!

மருத்துவமனை தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி செய்யுங்கள்!

நெடுஞ்செழியன் பேச்சு
(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நமது தொழிலாளர்கள் அன்றாடம் மணிக்கு மணி, நிமிடத்திற்கு நிமிடம் பொறுப்புடனும், அக்கரையுடனும், ஓய்வு ஒழிச்சல் இன்றி தங்கள் பணியைச் செய்து முடிக்க வேண்டும். அப்படிப்பட்ட தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமாகவும், இழிவாகவும் இருந்து வருகிறது.

இவர்கட்கு வீட்டு வசதிகள் இல்லை, தாம்பரத்திலிருந்தும், சைதாப்பேட்டையிலிருந்தும் கோடம்பாக்கத்திலிருந்தும் வந்தும் பணியாற்றுகிறார்கள். இந்தப் பொறுப்பான பணிகளை—நோயாளிகளுடைய அவசியமும், அத்யாவசியமும், பொறுப்புமிகுந்த பணிபுரியும் தொழிலாளருக்கு வீட்டு வசதிகள் இல்லை. போலீஸ்காரர்கட்கும், ஆஸ்பத்திரிகளில் பணிபுரிவோர் கட்கும் அவசியம் வீட்டு வசதிகள் செய்து தர வேண்டும் இது சர்க்காரின் கடமையும், பொறுப்புமாகும், இது சம்பந்தமாக நானும் நமது நண்பர்களும் சர்க்காரிடமும் அதிகாரிகளிடமும் கலந்து பேசி அதற்கான வேலைகள், செய்து வருகிறோம்.

நம்முடைய தொழிலாளர்கட்கு இன்னுமொரு அநியாயமும், கொடுமையானதுமான காரியம் செய்யப்பட்டு வருகிறது. அது மிகவும் பரிதாபகரமானது, வருத்தப்படக் கூடியதுமாகும்,

இப்பொழுது ஆஸ்பத்திரிகளில் பணியாற்றி வரும் பல தொழிலாளர்கள் 5 வருடம், 10 வருடம், 15 வருடம், 20 வருடம் என்று பணியாற்றி வந்தும் அவர்களை நிரந்தரமாக்கவில்லை. தற்காலிகமாகவே வைத்து வேலை வாங்குகிறார்கள். இன்னும் ஓய்வு பெற்று வேலையிருந்து போகும் வரை நிரந்தரமாக்காது இருக்கிறது.

ஓய்வு சம்பளங்கள் கிராஜுவட்டி இவைகள் கிடைக்காதும் பலர் இருக்கிறார்கள். இது என்ன கொடுமையான காரியம் 1 வருடம், இரண்டு வருடம் வேலை செய்தானதும் அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். இதைச் சர்க்கார் செய்தாக வேண்டும்.

இது சம்மந்தமாக கண் ஆஸ்பத்திரி அதிகாரிகளையும், வெட்டனரி ஆஸ்பத்திரி உதாரணமாக நமது வீடுகளில் கூட ஒட்டறை அடிக்க வேண்டுமானால் ஒரு நாளோ. இரண்டு நாளோ தேவைப்படும் போது வைத்துக் கொள்கிறோம்! அதே போன்று வெள்ளை அடிப்பதற்கும் எத்தனை நாள் தேவையோ அத்தனை நாள் வைத்துக் கொள்கிறோம், அதே போன்று பிள்ளையை வைத்துக் கொள்ள ஒரு ஆளை நியமித்தால் பிள்ளை தவழும், வரை ஓராண்டோ, இரண்டாண்டோ வைத்துக் கொண்டு அனுப்பி விடுகிறோம் ஏனென்றால் அது நிரந்தரமாக வைத்துக் கொள்ள அவசியமில்லாதது. சமையல்காரனை வைக்கிறோம். என்றால் அவனை நிரந்தரமாகவே வைத்துக் கொள்கிறோம். சமையல் நமக்கு அவசியம் தேவையானது! அன்றாடம் செய்ய வேண்டியது! ஆகவே அது போன்று அவசியமும், அன்றாடமும் தேவையான பணிகள் புரிவோரை நிரந்தரமாக்க வேண்டும். அதுவும் பல வருடங்கள் வேலை செய்து வந்தும் நிரந்தரமாக்கவில்லை யென்றால் அதை விட கொடுமையானது வேறில்லை.

இது சர்க்காருக்கு அவமானமும். வெட்கம் தரக் கூடிய காரியமாகும் இதை உடனே சர்க்கார் செய்ய வேண்டும்.

அதிகாரிகளிடம் கூறினால் நாங்கள் எழுதி விட்டோம்! எங்களால் ஒன்றுமில்லை சர்க்காரிடம் நீங்களே கூறுங்கள் என்று கூறுகிறார்கள் இது சம்மந்தமாக சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறோம்.

இம்மாதிரியான குறைபாடுகள் உடனடியாக நீங்கிவிடாது நாம் செய்யும் பணிகளிலும் நமது கட்டுபாடுகளால் தான் செய்ய முடியும் நாம் உடனே செய்துமுடிப்பதற்கு என்ன மகரிஷிகளா? மந்திரவாதிகளா, தந்திரம் செய்பவர்களா? உடனே கையை நீட்டி இன்ன நடக்க வேண்டுமென்றால் நடந்து விடுமா? அது போல் நடக்காது நமது குரல்கள் ஒன்றே போல் ஒலிக்க வேண்டும், ஒரே மனப்பான்மையுடனிருக்க வேண்டும். சங்கத்தை வளர்க்க வேண்டும்! அப்பொழுது தான் நம்மை சர்க்கார் மதிப்பார்கள், நமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள். பொதுமக்களும் நம்முடன் ஒத்துழைப்பார்கள்.

நாம் செய்யப்போகும் காரியங்கள் சாமான்யமானதல்ல. பல இடையூறுகளும், தொல்லைகளும் ஏற்படும்படியானது. அதையெல்லாம் நாம் சமாளிக்க வேண்டும், அப்போதுதான் நமது காரியங்களில் வெற்றி பெற முடியும். ஆகவே நாம் கட்டுப்பாடுடனும், ஒழுங்குடனும், ஒற்றுமையுடனும் இருக்க வேண்டும்,

தொழிலாளர்களின் உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டு, கோரிக்கைகளையும், குறைபாடுகளையும் வைத்து அவர்களை ஏவிவிட்டு அதனால் அரசியல் கட்சிகளை வளர்க்கவோ, அவர்களின் உணர்ச்சிகளைக் கிளப்பி அதனால் விளையாடவோ, அதன் விளைவாக பொதுமக்கள் சொத்துக்களுக்கோ, சர்க்காருக்கோ சேதம் விளைவிக்க எண்ணுபவர்களும் நாமல்ல. அவரவர்கள் அரசியல் கொள்கைகள் கோரிக்கைகள், அரசியல் திட்டங்கள் அவரவர்கள் இயக்கங்களில் மேடைகளில் இருக்கும் தொழிற் சங்கங்களில் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் குழப்பி அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள மாட்டோம்.

இந்தத் தொழிற் சங்கத்தில் காங்கிரசார், கம்யூனிஸ்ட்டுகள், முன்னேற்றக் கழகத்தார், மற்ற கட்சிக்காரர்கள், மதவாதிகள், விபூதிக்காரர்கள், நாமக்காரர்கள், கிறிஸ்தவர்கள், மகமதியர்கள், புத்தர்கள், மதமற்றவர்கள் எல்லோருமிருக்கிறார்கள். அவரவர்கள் கொள்கைகளை அவரவர்கள் மேடைகளில் வைத்திருக்கிறார்கள். இந்தத் தொழிற் சங்கத்தில் கலப்பதில்லை, மற்றும் அபாயகரமான காரியங்களைச் செய்தோ, அபாயகரமான வேலைகளில் ஈடுபடுத்தியோ, அதனால் தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், பீரங்கி சுடுதல், கண்ணீர்ப்புகை விடுதல் போன்ற காரியங்கள் நடக்கும் படியான காரியங்களிலும் இந்தத் தொழிலாளர்களை பயன்படுத்தமாட்டேன். ஒழுங்காகவும், நியாயமாகவும், சாந்தமாகவும், சமாதானமாகவும், நேர்மையான முறையிலும் பாடுபடச் செய்வேன், நமது குறைகள் நீங்குவதற்கு எங்கெந்த வகையில் பாடுபட வேண்டுமோ அப்படியெல்லாம் பாடுபடுவேன். இதற்கெல்லாம் நீங்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

நமது தொழிலாளர்களை பல ஆஸ்பத்திரிகளில் அடிமைகளாகவும், கேவலமான முறையிலும், மரியாதையற்ற முறையிலும் நடத்தி வருகிறார்கள். இது மிகவும் வருந்தக் கூடியது, அதிகாரிகள் இந்த மனப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். தொழிலாளர்களிடம் பண்போடும், மரியாதையோடும், மனிதத் தன்மையோடும் நடந்துகொள்ள வேண்டும், அதே நேரத்தில் நமது தொழிலாளர்களும் கண்ணியமாகவும், ஒழுங்காகவும் வேலைகளைச் செய்ய வேண்டும். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளில் பொறுப்பின்றியோ, தவறாகவோ, ஒழுங்கீனமாகவோ நடக்கக் கூடாது. நம்மிடம் பல உயிர்களை நம்பிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்குப் புறம்பாக நடந்து கொள்ளக் கூடாது. சங்கத்திற்கும் எங்களுக்கும் நற்பெயர் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

நான் கூட அதிகாரிகளிடம் சொன்னேன், "எங்கள் தொழிலாளர்கள் தவறு செய்தால், வேலைகளில் கவனக் குறைவாக இருந்தால் — அதிகாரிகளோடு ஒத்துழைக்க மறுத்தால் நோயாளிகளுக்கு பணி புரிவதில் பொறுப்பின்றி நடந்தால் எங்களிடம் தெரிவியுங்கள் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்."

ஆகவே நீங்கள் இந்த விஷயத்தில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும், உங்களால் எங்களுக்கோ, சங்கத்திற்கோ குறைவு வரக்கூடாது. அப்படி நீங்கள் நடந்து கொண்டால் பொதுமக்களின் ஆதரவும், பல அரசியல் கடசிகளின் அரவணைப்புகளும் கிடைக்கும். அரசாங்கமும் நம்முடைய குறைகளை நீக்க முற்படும். ஆகவே நீங்களனைவரும் கட்டுபாடாக ஒன்றுபடுங்கள். ஒற்றுமையாக இருங்கள். சங்கத்தைப் பலப்படுத்துங்கள். இங்கு நாம் ஒற்றுமையாக இருப்பதைக் கண்டு இந்த மாநிலத்திலுள்ள ஆஸ்பத்திரிகளில் பணி செய்யும் நமது தொழிலாளர்கள் நம்முடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

நானும் பல மாவட்டங்களுக்குச் செல்பவன். நம்முடைய பலத்தையும், கோரிக்கைகளையும் நாம் செய்யும் வேலைகளையும் அவர்களிடம் காண்பிப்பேன். சேலம், திருச்சி, மதுரை, கோவை முதலிய இடங்களுக்குப் போகும்போது அவர்களிடம் பேசி, அவர்களையும் நம்முடன் தொடர்பு கொள்ளச் செய்வேன், ஆகவே, நீங்கள் சங்கத்தை வற்புறுத்துங்கள். ஒற்றுமையாகப் பணியாற்றுங்கள். குறை கூறுபவர்களை பற்றி கவலைப்படாதீர்கள். இதுவரை அமைதியாக இருந்து கூட்டம் நடத்த ஒத்துழைத்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

———

Registered as a Newspaper in CEYLON
Regd No M. 7074 விலை 16 காசு MALAIMANI Phone No. 83285

திட்டம் கொடுத்தால் ஏற்றுக் கொள்வீர்களா ?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

(முனுசாமி பேச்சு)

நாங்கள் இனிதான் புதுத்திட்டத்தைத் தயாரிக்கப் போகிறோம். அதில் என்ன செய்யப் போகிறோம் என்று பொறுத்திருந்து பாருங்கள். அடுத்த ஏப்ரலுக்குப்பின் எங்களைக் கேளுங்கள். நாங்கள் நகர மன்றத்திற்கு சரியாக வர வேண்டிய இனங்களை வசூலிக்காது பணக்காரர்கட்கு உடந்தையாக இருந்து நஷ்டமாக்கியதை வசூலித்து லாபம் காட்டியிருக்கிறோம்.

நகர மன்றத்திலிருந்து பி. என். சி. மில்லுக்கு தண்ணீர் கொடுத்து வந்ததில் நகர மன்றத்திற்குச் சரியான முறையில் வரவேண்டிய வருமானம் வரவில்லை என்று கண்டுபிடித்து, எங்கள் குழுவுக்குள்ளே ஒரு முடிவுக்கு வந்தோம், அதில் 1—8—0 ரூபாயாக இருப்பதை 3 ரூபாயாக உயர்த்துவதென்று, அதை அதிகாரிகளுடன் கலந்தோம். அவர்கள் 2 ரூபாய் உயர்த்தலாம் என்றார்கள். நாங்கள் முடியாது நாங்கள் செய்தது தான் சரி என்று எண்ணி, கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. கோபால் அவர்களைச் சந்தித்து இப்படி உயர்த்தப்போகிறோம் உங்கள் கட்சிக்கு இதனால் ஆட்சேபனை உண்டா என்று கேட்டோம். அவரும் அனுமதித்தார். நமது தலைவர்களையும் அனுமதி கேட்டோம் அவர்கள் அனுமதி தந்தபின் எங்கள் குழு 7பேர்கள் கூடி முடிவு செய்தோம். அதாவது மில்லுக்கு 1000 காலன் தண்ணீருக்கு 1—8—0 இருப்பதை 3 ரூபாய் வீதமும் துறைமுகத்திற்கு 5 ரூபாய் 59 காசுகள் வீதமும் வசூலிப்பதென்று முடிவு செய்தோம். இதனால் நகரமன்றத்திற்குப் பல லட்ச ரூபாய்கள் வருமானம் வருகிறது இதை மாற்ற யாருக்கும் அதிகாரமில்லை எங்கள் கமிட்டிக்குத்தான் அதிகாரம். இதை வைத்து நான் பி. என். சி. மில்காரரிடம் லஞ்சம் வாங்கி விட்டேன் என்றும் பிரச்சாரம் செய்தார்கள்.

மில்காரர்கள் மீண்டும் கமிஷனரிடம் வந்து புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். கமிஷனர் என்னிடம் அழைத்து வந்தார். மில்லிலிருந்து வந்தவர்கள் என்னை முதலில் நம்முடைய கட்சியின் கொள்கையாகிய தென்னாட்டுப் பிரச்சினையை வைத்துக் கொண்டு தென்னாட்டில் இந்த ஒரு மில்தான் நல்ல முறையில் நடக்கிறது. அதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். இந்தத் தண்ணீர் கட்டணத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டார்கள். கமிட்டி முடிவு செய்தாகி விட்டது. இது முடியாத காரியம் என்றேன். உயர்த்தியது பற்றிக்கூட கவலை இல்லை. எங்களை ஒரு வார்த்தை கேட்டுச் செய்யக் கூடாதா? என்று கேட்டார்கள், நான் கூறினேன் அது சரி உங்களைக் கேட்க வேண்டியதுதான். 48-49-ம் ஆண்டு உங்கள் மில் துணிகள் விலை என்ன? இப்பொழுது விலை என்ன? முன்பு 1—8 ரூபாயிக்கு விற்றது. 5 ரூபாய் 10 ரூபாய்க்கு விற்கிறதே ஏன் என்றேன், சாமான்கள் விலை ஏற்றம், மற்றும் பல வாழ்க்கைத்தர உயர்வுகளை உத்தேசித்துதான் உயர்ந்திருக்கிறது என்றார்கள். நான் கூறினேன், அதுபோல்தான் இங்கும் பல உயர்வுகள் ஏற்பட்டிருக்கிறது அதை உத்தேசித்து உயர்த்துகிறோம், உங்களைக் கேட்காது கட்டணம் உயர்த்தியதை நீங்கள் கேட்கிறீர்கள். உங்கள் துணியை உபயோகிக்கின்றவர்களைக் கேட்டுத்தான் விலையை உயர்த்துகிறீர்களா? அப்படியானால் 15 வருடமாக உங்கள் துணியை வாங்கும் என்னிடம் கேட்டீர்களா என்றும் கேட்டேன். பின் போய் விட்டார்கள். அதே போன்று வீடு கட்டுவதற்கான லைசென்ஸ் கட்டணங்களையும் உயர்த்தியிருக்கிறோம். அதில் பல லட்சங்கள் வருமானம் வரும். இதையெல்லாம் அவர்கள் நஷ்டமாக்கி வந்தார்கள். இன்னும் இது போன்று பல செய்திருக்கிறோம்.

நமது கட்சியைத் திட்டம் கேட்கிறார்கள், நான் கொடுக்கிறேன், ஏற்றுக்கொள்வார்களா? அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும். ஒரு சிலருக்கு வேலை தர முடியும், பல லட்சம் வருமானம் வரும்.

நமது நகரில் பாதாளத்தில் புதைத்து வரும் இரும்புக் குழாய்களை நாம் வடக்கே இருந்து வாங்கி வருகிறோம்: கிர்க்கி என்ற கம்பெனியிலிருந்து பெற்று வருகிறோம். அது மார்ட்டின் என்ற வெள்ளையருடையது. அந்தக் கம்பெனியிலிருந்துதான் இந்தியாவிலுள்ள எல்லா நகர சபைகளுக்கும் செல்லுகின்றன, அந்தக் குழாய்கள் செய்ய இங்கே வசதிகள் இருக்கிறது. நமது நகர சபை ஓர்க் ஷாப்பில் அதற்கான மிஷின்கள் இருக்கிறது. அதைச் செய்வதற்கான திறமை படைத்தவர்களுமிருக்கிறார்கள். இதற்கான திட்டமும் அதிகாரிகளிடம் கேட்டிருக்கிறேன். அதுவும் 1 மாதத்தில் கொடுக்க உத்திரவிட்டிருக்கிறேன். அப்படி இங்கு செய்தால் அதாவது 35 லட்சம் ரூபாய் செலவு செய்து, இங்கு ஆரம்பித்தால் வருடம் 10 லட்சம் ரூபாய் வரும். 1500 பேர்கட்கு வேலை தரலாம், இதற்கு எங்களுக்கு சர்க்கார் வாய்ப்பளித்தால் எங்களால் செய்ய முடியும். இது போல் பல திட்டங்கள் வைத்திருக்கிறோம். அதற்கெல்லாம் உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறோம். வணக்கம்.

தென்னகமெங்கும் வெற்றி முழக்கம்!

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை